மாலை : 50 மணி : 1 ஜனவரி 2008 விலை ரூ. 10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு



அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி - திருத்தணி

அருள்மிகு மத்யபுரீசுவரர் திருக்கோயில் என வழங்கப்படும்

# அருள்மிகு பொது ஆவுடையார் திருக்கோயில்

பரக்கலக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்



⌘ தலவிருட்சமே தெய்சந்நிதானமாக வழிபடப்படும் திருக்கோயில்

⌘ இந்த வெள்ளால மரமே தில்லையம்பலவாணன் நின்று உலகுக்கு உண்மையை உபதேசித்த திருத்தலம். இந்த மரத்தின் முன்புறம் இரண்டு திருவடிகள் உள்ளன. மரத்தில் சந்தனம் பூசப்பட்டு அதன்மீது நாசி, கண்கள், புருவம், வாய் முதலானவை பொருத்தப்பட்டு, முன்புறம் பிரபை சார்த்தப்படுகிறது. அந்த மரத்தினைச் சுற்றி சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இதுவே கருவறையாக விளங்குகிறது. அம்பாள் சன்னதி தனியே கிடையாது. எதிரே நந்திதேவர் மட்டும் உண்டு.

⌘ வான்கோபர், மகாகோபர் முனிவர்களுக்கு உலகின் இயற்கைத் தன்மையைத் தில்லைக் கூத்தனே வந்து நின்று அருளிய திருத்தலம். இருவருக்கும் இடையில் நின்று மத்யஸ்தம் செய்து வைத்ததால், மத்யபுரீசுவரர் எனவும். பொதுவாக இவ்வுலகையே ஆவுடையாராகக் கொண்டு மரமே சிவலிங்க ரூபத்தில் காட்சி தருவதால் பொது ஆவுடையார் திருக்கோயில் எனவும் வழங்குகிறது.

⌘ தில்லைச் சிற்றம்பலவாணனே இவ்வூரிலிருந்து அருள்புரிவதால் இவ்வூர் தென்சிதம்பரம் எனவும் வழங்கப்படுகிறது.

⌘ இறைவன் இவ்வூருக்கு தில்லையில் அர்த்தஜாம பூஜை முடிந்தபிறகு திங்கட்கிழமை வந்து நின்று மத்யஸ்தம் செய்து வைத்ததால், ஒவ்வொரு சோமவாரமும் (திங்கட்கிழமை) இரண்டாம் ஜாம பூஜை மட்டும் இத்திருக்கோயிலில் நடத்தப்படுகிறது. மற்ற நாட்களில் பூஜை எதுவும் கிடையாது.

⌘ கார்த்திகை நான்கு சோமவாரமும் முக்கியமான நாட்களாகும். மூன்றாம், நான்காம் சோமவாரங்களில் மக்கள் பெருமளவில் தரிசனம் செய்ய வரும் திருக்கோயிலாகும். நான்கு சோமவாரம் முடிந்து மார்கழி முதல் சோமவாரம் விடையாற்றி விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

⌘ பகல் நேரத்தில் இந்த திருக்கோயிலில் தரிசனம் செய்ய முடியாது. தைப்பொங்கல் நாளில் மட்டும் பகல் நேர தரிசனம் செய்ய முடியும்.

**"தில்லையம்பலவாணனைத் தரிசித்து திவ்யங்கள் பெறுவோமே!"**

திரு. **பொ. ஜெயராமன்** எம்.ஏ., நிர்வாக அதிகாரி

திரு. **எஸ். சடகோப ராமாநுஜம்** பரம்பரை அறங்காவலர்

செயல் அலுவலர் கைபேசி : 9443 586451



# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2038 | ஆண்டு 2038 மணி 1 | ஸர்வஜித்-தை ஜனவரி 2008

## அன்பார்ந்த வாசகப்பெருமக்களே!

நம் தமிழ் திருநாடு ஒரு பண்பாட்டுக் கருவூலம். தமிழ் மக்களின் பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது ஆண்டு முழுவதும் நாம் கொண்டாடி மகிழும் விழாக்கள். இவ்விழாக்கள் அனைத்தும் இயற்கையோடு இயைந்த தெய்வங்களைப் போற்றி வணங்கி கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையிலே உலகின் இருளகற்றும் ஞாயிறை, "ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்" எனத் தைத் திங்கள் முதல் நாளில் பொங்கல் விழாவாகக் கொண்டாடி மகிழ்கிறோம். ஆண்டு முழுவதும் தான் பாடுபட்டதற்கான பலனை இத்திங்களில் உழவன் காண்கிறான். அந்தப் பூரிப்பில் இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் "ஞாயிறை" வழிபட்டும், தன்னோடு உழைத்திட்ட மாடுகளுக்கு நன்றி செலுத்தும் வகையில் மாட்டு பொங்கலிட்டும் கொண்டாடி மகிழ்கின்றனர்.

நமது உடம்பு சிறியதொரு குடிசை. அதனுள் நாம் (ஆன்மா) வாழ்கிறோம். நம்மோடு இருக்கும் ஐம்புலன்கள் நம்மை அடக்கி ஆளத் துடிக்கின்றன. நாம் அவற்றை அடக்கி ஆண்டு வெற்றியடைய வேண்டும். அகம் (மனம்) அடுப்பு, அடுப்புக்கான மூன்று கற்கள், "அன்பு, பொறுமை, அவா அறுத்தல்". ஞானக் கனல் எரியும் விறகு, உயிர் கலசம் அருள் கருப்பஞ்சாறு, சிவானந்தமே பொங்கி எழும் மதுரச் சோறு எனும் கருத்தமைந்த தத்துவத்தை வழங்கியுள்ள திருப்போரூர் சிதம்பர சுவாமிகளின் பின்வரும் பாடலினை இந்நாளில் நினைவு கொண்டு ஆன்மிகப் பொங்கலிட்டு ஆனந்தம் பெறுவோமே.

"அடியார் நிமலத் திருவகத்துள் அன்பு பொறுமை அவா அறுத்தல்
அடுப்பு ஆங்கு அமைத்து, மலக்காட்டத்ததிக ஞானக்கனல் மூட்டி
மடியாதிருந்த உயிர்க்கலசம் வழிய, அருள் பேருலை வார்த்து
மாறாப் பெருமைச் சிவானந்த மதுரச்சோறு தினம் பொங்கி
விடியாச் சீவபோத இருள்வீய, மவுனச் சுடர் விளக்கு
விளக்கி, இருந்தபடி இருந்து, மேலாம் சிற்றில் விளையாடும்
செடுதீரகத்தோர் புகழ் வாலை சிறுவர், சிற்றில் சிதையேலே
தேரூர் வீதிப் போரூரா, சிறியேஞ் சிற்றில் சிதையேலே"

நாளும் பல காரியங்களில் ஈடுபட்டு சோர்வுறும் மனித மனத்தை அருளாற்றல் நிலையமாகிய திருக்கோயில்களில் ஈடுபடுத்தி, அருளாற்றலை ஊட்டி, சோர்வை நீக்க வேண்டும் என்றும், அணுமயமாக இருக்கும் அண்டங்கள் எல்லாம் இசைக்கு இயைந்து ஆடுகின்றன என்று மேலை நாட்டவரும் தெரிவித்துள்ள தத்துவார்த்த உண்மைதனை சுட்டிக்காட்டி "அரியன் அடியவர்க்கு எளியவன்" எனும் தலைப்பில் அருமையானதொரு ஆய்வுக் கட்டுரையினை இவ்விதழில் வழங்கியுள்ளார் திருவாவடுதுறை ஆதின புலவர் திரு.மு. கந்தசாமி பிள்ளை அவர்கள்.

அறியாமையாகிய அக இருளிலிருந்து ஆன்மா இறைவனாகிய வெளிச்சத்தில் ஐக்கியமாகும்போது உய்தி பெறும் எனும் தத்துவத்திற்கு சான்றாக, சோதி வழியே இறைவனைக் கண்ட மணிவாசகப் பெருமானையும், வள்ளலாரின் வழிதனையும், "தைப்பூசத் திருநாள்" எனும் தலைப்பில் தொகுத்து வழங்கியுள்ளார், தமிழாகரர் தெ. முருகசாமி அவர்கள்.

யோக நெறிக்கு சக்தியாகிய அம்பிகையின் துணை வேண்டும் என்பதை "திருமூலரின் யோக நெறியில் அம்பிகையின் துணை" எனும் தலைப்பில் வடித்துத் தந்துள்ளார் டாக்டர். திருமதி. இராதா தியாகராஜன் அவர்கள்.

"மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்" எனப் போற்றி வாழ்ந்த மெய்ப்பொருள் நாயனாரின் மாண்பினை "தொழுது வென்றார்" எனும் தலைப்பில், புலவர் மு. இராசரத்தினம் அவர்களும், தேய்க்கும் என் கைக்கும் ஏது தட்டுப்பாடு எனக் கருதி தன் கரத்தை சந்தனக்கல்லில் தேய்த்து இறைவனுக்கு அணி செய்யும் சந்தனம் அளித்த மூர்த்தி நாயனாரின் கீர்த்திதனை புலவர் ஆரூர் சுந்தரராமன் அவர்களும் இவ்விதழிலில் வழங்கியுள்ளனர்.

எந்நலத்திலும், உயர்ந்தது சொல் நலம். அந்த சொல் நலம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை "சொல் நலன்" எனும் தலைப்பில் அருண்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் வழங்கிய அறிவுரை அவரது நினைவலைகளாக இவ்விதழில் வழங்கப்பட்டுள்ளது.

திரு. பெ. இராமநாதபிள்ளை அவர்களின் "உலகம் உய்ய உதித்த உடையவர்" எனும் தலைப்பில் வரும் "இராமானுஜரின்" தொடரும், கலைமாமணி செந்தமிழ்வாரிதி செல்வக்கணபதி அவர்களின் "சைவமும், தமிழும்" தொடரும், டாக்டர். சரசுவதி இராமநாதன் அவர்களின், கந்தரநுபூதித் தொடரும் இவ்விதழில் தொடர்ந்து வெளிவந்துள்ளன.

கடன், நோய், எதிரி என்ற மூன்று தீயவற்றைப் போக்கும் பரிக்கல் அருள்மிகு இலட்சுமி நரசிம்மர் திருக்கோயில் சிறப்புகளும், வந்தாரை வாழவைக்கும் அருள்மிகு வல்லக்கோட்டை முருகன் திருக்கோயில் சிறப்புகளும், தோஷங்கள் நிவர்த்தி தலமாகவும், திருமணத்தடைகள் விலகும் தலமாகவும் விளங்கும் திருவிடந்தை, அருள்மிகு நித்ய கல்யாணப் பெருமாள் திருக்கோயில் சிறப்புகளும், அடியார்கள் அனைவரும் அவசியம் கண்டு தரிசிக்க வேண்டிய திருச்சோபுரம் திருக்கோயில் சிறப்புகளும் திருத்தல உலாவாக இவ்விதழில் வெளிவந்துள்ளன.

இதழினைப் படித்து இன்புறுவோமாக.


அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.,)
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்

இந்து சமய அறநிலையத் துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

# குறளோவியம்





மாண்புமிகு முதல்வர்
டாக்டர் கலைஞர்

'மனோன்மணியம்' நூலில் சில கதாபாத்திரங்களைக் காணுகிறோம். பாண்டி நாட்டு மன்னன் ஜீவகன் - எல்லோரையும் எளிதில் நம்பிவிடும் இயல்பினன். அவனுக்கு ஒரு அமைச்சன், பெயர் குடிலன்! குடிகெடுக்கும் குணம் படைத்தவன். அவனிடம் மிகுந்த நம்பிக்கை கொண்டு அவன் சொற்படியெல்லாம் பாண்டிய மன்னன் கேட்கிறான். அதன் விளைவாகப் பாண்டிய நாட்டுக்கும் சேர நாட்டுக்கும் போர் மூளுகிறது. சேர மன்னன், தன் படையுடன் கிளம்பி பாண்டிய நாட்டை வென்றிட வரும் வழியில் பாசறை அமைத்துத் தங்குகிறான்.

குடிலன், பாண்டிய நாட்டைச் சேர நாட்டுக்குக் காட்டிக் கொடுத்து பாண்டியப் பேரரசின் மன்னனாகத் தான் ஆகிவிடத் திட்டம் தீட்டுகிறான்.

பாண்டிய மன்னன், தங்கியிருக்கும் கோட்டையில் ஒரு பாதுகாப்புக் குகையிருக்கிறது. குடிலன் அவ்வழியாக வெளியே சென்று சேர மன்னன் புருடோத்தமனை இரகசியமாகச் சந்தித்து, குகை வழியாகச் சென்றால் பாண்டியனைப் பிடித்துச் சிறையில் தள்ளிவிடலாம் என்று கூறுகிறான்.

புருடோத்தமன், குடிலன் சொன்னது அனைத்தையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, இறுதியாகத் தன் காவலரை நோக்கிக் குடிலனைக் கைது செய்யுமாறு ஆணை பிறப்பிக்கிறான்.

குடிலன் நடுங்கிப் போகிறான்.

"அரசே! தங்களுக்குத் துணைபுரிய வந்த எனக்கு இப்படி ஒரு தண்டனையா?" எனக் கேட்டுக் கதறுகிறான்.

அவனைப் பார்த்துப் புருடோத்தமன் சொல்லுகிறான்.

"குடிலா! நேரான வழியில் போர்புரிந்து பாண்டியனைக் களத்தில் சந்திக்கும் ஊக்கமும், வீரமும் எனக்கும் என் படைத் தளபதிக்கும் உண்டு. உன் மன்னருக்குத் துன்பம் வருகிற நேரத்தில் அவரைக் கைவிட்டுக் காட்டிக் கொடுக்கத் துணிந்துவிட்ட நீ: பிறிதொரு நாள் அதே காரியத்தை எனக்குத் தீங்கு வரும்போது செய்ய மாட்டாய் என்று எப்படி நான் நம்ப முடியும்? அதனால்தான் உனக்கு இந்த தண்டனை!"

குடிலன் விலங்கிடப்பட்டுப் பாண்டியன் முன் நிறுத்தப்படுகிறான். பாண்டியன் குடிலனின் துரோகச் செயலை உணருகிறான். சேர, பாண்டியர்களிடையே நட்பு உருவாகிறது. இவ்வாறு மனோன்மணியம் மகிழ்ச்சிகரமாக முடிகிறது. இந்த கதாபாத்திரங்களின் வாயிலாக 'மனோன்மணியம் ஆசிரியர், திருக்குறளின் அரிய கருத்தொன்றை வெளிப்படுத்துகிறார்.

"ஊக்கம் குறைவதற்கான காரியங்களை எண்ணவே கூடாது. அதேபோலத் துன்பம் வருகிற நேரத்தில் கைவிடுகிறவர்களின் நட்பைக் கொள்ளவும் கூடாது."

குடிலனைப் புருடோத்தமன் புரிந்து கொண்ட காரணத்தால் குறள் மொழிப்படி நடந்து காட்டினான்.

"உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு"

அதிகாரம் : 80 நட்பாராய்தல் பாடல் : 798

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.




## இதழின் உள்ளே


1. அருள்மிகு முருகவேள் 108 போற்றிகள் - 4
2. அரியன், அடியவர்க்கு எளியவன்
   திருவாவடுதுறை ஆதினபுலவர்
   கலைமாமணி சு. கந்தசாமிபிள்ளை - 6
3. தைப்பூசத் திருவிழா
   தமிழாகரர் தெ. முருகசாமி, புதுச்சேரி - 8
4. உலகம் உய்ய உதித்த உடையவர்
   பெ. இராமநாதபிள்ளை, செயல் அலுவலர் - 10
5. திருமூலரின் யோகநெறியில் அம்பிகையின் துணை
   டாக்டர் திருமதி. இராதா தியாகராஜன் - 12
6. தொழுது வென்றார்
   புலவர். மு. இராசரத்தினம் - 14
7. பரிக்கல் அருள்மிகு இலட்சுமி நரசிம்மர் திருக்கோயில் - 17
8. வல்லக்கோட்டை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் - 20
9. தம்பிரான் கண்ட தேவாரத்தலம்
   பனையபுரம் அதியமான் - 22
10. சொல்நலன்
    அருண்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் நினைவலைகள் - 24
11. இறைவன் வைத்த தண்ணீர் பந்தல்
    பூசை ச. ஆட்சிலிங்கம் - 27
12. மூர்த்தி நாயனார் கீர்த்தி
    ஆரூர். எஸ். சுந்தரராமன் - 29
13. வேலும் மயிலும் துணை - கந்தர் அநுபூதி
    டாக்டர் சரசுவதி இராமநாதன் - 30
14. சூடிக் கொடுத்த சுடர்கொடி
    எஸ்.என். தோத்தாத்திரி காட்டுமன்னார்கோயில் - 33
15. சைவமும் தமிழும்
    கலைமாமணி செந்தமிழ்வாரிதி
    முனைவர் இரா. செல்வக்கணபதி - 35
16. திருவிடந்தை அருள்மிகு நித்திய கல்யாண பெருமாள் - 37


# அருள்மிகு முருகவேள்

## 108 போற்றிகள்



1. ஓம் அறுமுகச் சிவமே போற்றி
2. ஓம் அறுகுசூடிதன் இளையாய் போற்றி
3. ஓம் அழகினுக் கழகே போற்றி
4. ஓம் அருளினுக் கருளே போற்றி
5. ஓம் அலங்கார நாயக போற்றி
6. ஓம் அநுபூதி நாதனே போற்றி
7. ஓம் அன்பின் அண்ணா போற்றி
8. ஓம் ஆறுமுக அப்பா போற்றி
9. ஓம் இமையோர் இறைவா போற்றி
10. ஓம் இமயப் புகழோய் போற்றி
11. ஓம் இருளினை நீக்குவாய் போற்றி
12. ஓம் இருசுடர் ஆனாய் போற்றி
13. ஓம் ஈசனார் குருவே போற்றி
14. ஓம் ஈரேழ் உலகோய் போற்றி
15. ஓம் உமையருட் செல்வா போற்றி
16. ஓம் உயர்மறைப் பொருளே போற்றி

17. ஓம் எஃக வேலுடையாய் போற்றி
18. ஓம் எமபயம் நீக்குவாய் போற்றி
19. ஓம் எழில் அற்புதனே போற்றி
20. ஓம் ஏறுமயில் ஏறி போற்றி
21. ஓம் ஒப்பிலா இறைவா போற்றி
22. ஓம் ஓங்காரப் பொருளே போற்றி
23. ஓம் ஔவைக் கரசே போற்றி
24. ஓம் கங்கையின் மைந்தா போற்றி
25. ஓம் கடம்பா இடும்பா போற்றி
26. ஓம் கதிர்காமக் கந்தா போற்றி
27. ஓம் கந்தா முருகா போற்றி
28. ஓம் கவிமாலை அணிந்தாய் போற்றி
29. ஓம் கார்த்திகேயனே போற்றி
30. ஓம் காவற் காரனே போற்றி
31. ஓம் காவடி விருப்பனே போற்றி
32. ஓம் குகனென நின்றாய் போற்றி
33. ஓம் குமரகிரி வாசனே போற்றி
34. ஓம் கும்பமுனிக் குருவே போற்றி
35. ஓம் குராவடி வேலனே போற்றி
36. ஓம் குறத்திக் கோவே போற்றி
37. ஓம் குறிஞ்சிக் கிழவா போற்றி
38. ஓம் குன்றம் எறிந்தோய் போற்றி
39. ஓம் குன்றுதோ றாடுவாய் போற்றி
40. ஓம் கூத்தன் மைந்தா போற்றி
41. ஓம் கூத்தாடு மயிலோய் போற்றி
42. ஓம் கொற்றவை குமரா போற்றி
43. ஓம் கொற்றதனி வேலோய் போற்றி
44. ஓம் கோலமயில் குமரா போற்றி
45. ஓம் கோரும்வரம் தருவாய் போற்றி
46. ஓம் சங்கப் புலவா போற்றி
47. ஓம் சரவண பவனே போற்றி
48. ஓம் சகல நலம் அருள்வாய் போற்றி
49. ஓம் சண்முகக் குமரா போற்றி
50. ஓம் சிவகுரு நாதா போற்றி
51. ஓம் சிவசுப்பிர மணியா போற்றி
52. ஓம் சீரலைவாய்த் தேவே போற்றி
53. ஓம் சூர் முதல் தடிந்தாய் போற்றி
54. ஓம் செஞ்சுடர் வேலா போற்றி
55. ஓம் செவ்வேள் பரமா போற்றி
56. ஓம் செந்தில் வாழ்வே போற்றி
57. ஓம் செந்தமிழ்ச் செல்வா போற்றி
58. ஓம் செங்கோட்டு வெற்பா போற்றி
59. ஓம் சேவற் கொடியோய் போற்றி
60. ஓம் சேந்தா முருகா போற்றி
61. ஓம் சைவக் கொழுந்தே போற்றி
62. ஓம் ஞானச் சுடரே போற்றி
63. ஓம் ஞானப் பழமே போற்றி
64. ஓம் தங்க வேலனே போற்றி
65. ஓம் தண்டாயுதபாணியே போற்றி
66. ஓம் தமிழ்மா மறையே போற்றி
67. ஓம் தமிழெனும் அழகே போற்றி
68. ஓம் திகழ்மணி மார்பா போற்றி
69. ஓம் திகழ்மயில் வாகனா போற்றி
70. ஓம் திருச்செந் தூரா போற்றி
71. ஓம் திருப்பரங் குன்றா போற்றி
72. ஓம் திருஆவி னன்குடியாய் போற்றி
73. ஓம் திருவே ரகக்குருவே போற்றி
74. ஓம் திருத்தணிகைத் தமிழே போற்றி
75. ஓம் திருப்புகழ் விருப்பா போற்றி
76. ஓம் திருமால் மருகா போற்றி
77. ஓம் திருவருட் செல்வா போற்றி
78. ஓம் தீமையைத் தீர்ப்பாய் போற்றி
79. ஓம் துங்கக் கொடையோய் போற்றி
80. ஓம் தூ மறைக்கு ஆதி போற்றி
81. ஓம் தெய்வானை கணவா போற்றி
82. ஓம் தேவர்தம் கோவே போற்றி
83. ஓம் நக்கீர நாயகா போற்றி
84. ஓம் நற்றமிழ் வேந்தே போற்றி
85. ஓம் பழநிமலை வாழ்வே போற்றி
86. ஓம் பழமுதிர்ச் சோலையாய் போற்றி
87. ஓம் பன்னிரு தோளாய் போற்றி
88. ஓம் பதினெண்கண் மலர்ந்தாய் போற்றி
89. ஓம் பிணிமுகம் ஏறுவாய் போற்றி
90. ஓம் பிணிக்குலம் ஓட்டுவாய் போற்றி
91. ஓம் பிரணவம் மொழிந்தாய் போற்றி
92. ஓம் பிரமனைக் குட்டினாய் போற்றி
93. ஓம் பிறவா நெறி அருள்வாய் போற்றி
94. ஓம் மலைமகள் மகனே போற்றி
95. ஓம் மன்றாடி மைந்தா போற்றி
96. ஓம் மாயோன் மருகா போற்றி
97. ஓம் முத்தமிழ் முருகா போற்றி
98. ஓம் முத்தைய வேளே போற்றி
99. ஓம் முருகெனும் அழகே போற்றி
100. ஓம் முருகாற்றுப் படையோய் போற்றி
101. ஓம் மூவர்க்கும் முதல்வா போற்றி
102. ஓம் வள்ளி நாயகனே போற்றி
103. ஓம் வழித்துணைக் குழகா போற்றி
104. ஓம் விழித்துணை அழகா போற்றி
105. ஓம் வெற்றிவேல் முருகா போற்றி
106. ஓம் வேடர்தம் மருகா போற்றி
107. ஓம் வையச் சுடரே போற்றி
108. ஓம் வைர வேல் வீரா போற்றி போற்றி



# "அரியன், அடியவர்க்கு எளியவன்"

கிடைத்தற்கும் காண்டற்கும் அருமையாக இருக்கும் பொருளை அரிய பொருள் என்கிறோம்.

கடவுளும் அரிய பொருளே! எல்லாவற்றையும் கடந்திருப்பதால் "கட", எல்லாவற்றிலும் ஊடாடி, கலந்து நிற்பதால் "உள்" அதாவது கடந்தும் கலந்தும் இருக்கும் ஆண்டவனைக் "கடவுள்" என்ற சொல்லால் கூறுகிறோம்.

அவன் ஆணல்லன், பெண் அல்லன் அலியுமல்லன்.

பசுவினுடைய உடம்பு முழுதும் பால் இருந்தாலும் காதையோ, கொம்பையோ, வாலையோ பற்றி இழுத்தால் பால் வருமா? வராது. மடியில்தான் பால் கிடைக்கும். அதேபோல நிலத்தின் அடியில் நீர் இருந்தாலும் கிணற்றிலே, கேணியிலே, ஏரியிலே, குளத்திலேதான், தண்ணீர் எளிதில் கிடைக்கிறது.

ஆண்டவனும் எல்லாவற்றிலும் கலந்திருந்தாலும் திருக்கோவில்களில் விளங்கித் தோன்றுகிறான்.

மின் மீட்டியில் (Battery) ஆற்றல் குறைந்து விட்டால், அதைச் சக்தி நிலையத்தில் (Power House) வைத்து மீண்டும் அதில் சக்தியை ஏற்றுகிறோம்.

நாளும் பல காரியங்களில் ஈடுபடுகிறோம். மனம் என்ற மனித மின் மீட்டி (Human Battery) ஆற்றல் இழந்து சோர்வுறுகிறது. அந்த மனத்தை அருளாற்றல் நிலையமாகிய திருக்கோவில்களில் ஈடுபடுத்தி, அருளாற்றலை ஊட்டிச் சோர்வை நீக்கவேண்டும்.

திருக்கோவிலில் திருவுருவங்களை வைத்து வணங்குகிறோம். அத்தனையும் ஆண்டவனது சின்னங்கள்.

சின்னங்கள் வழியாக அவனைக் காண்கிறோம். "Hindus worship not the images, but they worship God thro' the images"

அசோகச் சக்கரம் பொறித்த மூவண்ணக் கொடி, நாட்டின் சின்னம்.

ஒரு கடையில் மிளகாய், பாகற்காய் முதலியன இருந்தன. அவைகளின் தோற்றம் கண்ணை இழுத்தது. வாங்கிக் கடித்தேன், மிளகாய் எறிக்கவில்லை, இனித்தது. பாகற்காயும் இனித்தது. வியப்போடு கடைக்காரரை கேட்டேன், அவர் சிரித்துக் கொண்டே அத்தனையும் பால்கோவா என்றார். என் அறியாமையை நினைந்து நானும் சிரித்தேன்.

வடிவத்தில் வேறுபட்டாலும் பொருள் ஒன்றே என அறிந்து மகிழ்ந்தேன்.

ஒரு வீட்டில் ஒரே கண்ணாடியில் 7, 8 படங்களைக் கண்டேன். அந்த வீட்டுத் தம்பி, ஒவ்வொன்றையும், சுட்டிக் காட்டி "இது எங்க அப்பா சட்டத்தேர்வு தேறியவுடன் எடுத்தது. இது எம்.ஏ., படித்தவுடன் எடுத்தது. இது நடுவர் வேலை பெற்றதும் எடுத்தது, இது பூப்பந்து ஆடும் போது எடுத்தது, இது

---

"சமயப் பிரசாரமணி" - "சைவப்பெருந்திரு"
"சொல்லரசு" "கலைமாமணி"

**சு. கந்தசாமிபிள்ளை,**
சமய இலக்கியச் சொற்பொழிவாளர்,
திருவாவடுதுறை ஆதின புலவர்

எங்களோடு எடுத்தது" என அடுக்கிக் கொண்டே போனான். ஒரு உண்மையை உணர்ந்தேன்.

ஒரே ஆள், பல நிலைகளில் எடுத்த படங்கள். அதேபோலத்தான் ஆண்டவனைக் குறிக்கும் திருவுருவங்களும். ஒரே ஆளை, மகன் அப்பா என்கிறான், மனைவி வீட்டுக்காரர் என்கிறாள், அவரது தாய், மகனே என்கிறாள், தொழிற்கூடத்தில் அவர் மேலாளர், நண்பனுக்குத் தோழன், மாணவனுக்கு ஆசிரியன்.

அதேபோலத்தான் ஆண்டவனையும் பல பெயரிட்டு அழைத்தாலும் அவன் ஒருவனே. "ஒருருவம் ஒருநாமம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ".

பிள்ளையார் அறிவின் வடிவம், முருகன் ஒளியின் வடிவம், கூத்தப்பொருமான் ஆட்டத்தின் வடிவம்.

இசைக்கு ஆடும் பெருமான், - இராகம், தாளம் முதலியவற்றிற்கு ஆடும் பெருமான், இயக்கி ஆடும் பெருமான் - தான் எல்லாவற்றையும் இயக்கி, தானும் இயங்குகிறான்.

செர்மன் நாட்டு செயின்ட் ஜீனா பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஹாக்கால் 50 ஆண்டுகள் மனிதன், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன முதலியவற்றின் உடற்கூறுகளை ஆய்ந்தார். எல்லாம் இயங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். "அண்டத்தின் மர்மம்" (The Riddle of the universe) என்ற தலைப்பில் தனது அரிய ஆராய்ச்சியை வெளியிட்டிருக்கிறார். அதில் (The universe consists of atoms and all the atoms move in a rythmic dance) அண்டங்கள் எல்லாம் அணுமயமாக இருக்கின்றன. எல்லா அணுக்களும் இசைக்கு அமைந்து ஆடுகின்றன எனப் பேசுகிறார்.

பிரஞ்சு நாட்டு மெய்ஞ்ஞானி ரோமான் ரோலந்து, ("I hear lord Siva dancing in the herat of the universe and in my own heart") அண்டத்தின் அகத்திலும் என் உள்ளத்திலும் சிவபெருமான் நடனமாடுவதைக் கேட்கிறேன் என்கிறார்.

அமெரிக்க நாட்டு ஹவார்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் "எல்லாம் இயங்குகின்றன, அடிப்படை எங்கே" என ஆய்ந்த அவர் கைக்கு ஆடும் பெம்மானது திருவுருப் படம் கிடைத்தது: வியந்தார்.

சிதம்பரம் வந்தார். பெருமானைக் கண்டார். "இது ஞாயிற்றுக்கிழமை ஆடுமா? எனக் கேட்டாராம்.

"ஞாயிற்றுக்கிழமை ஓய்வு கிடையாது. இரவு 12 மணிக்குப் போய்ப் பார்த்தாலும் பெருமான் ஆடுகிறார். நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதன்" என்றார்களாம்.

மழை பொழியும்போது, தண்ணீரிலே குளிக்கிறோம், அதைக் குடிக்கிறோம். அது மேகமாக இருக்கும்போது கண்ணால் மட்டும் காண முடியுமே தவிர குளிக்க முடியாது. மேகமாக ஆவதற்கு முந்திய நிலையை நாம் கண்டுகொள்ள முடியாது. வானிலை ஆராய்ச்சியாளர் காண்பர்.

அதேபோல ஆண்டவனும் குணம், குறி ஒன்றும் இல்லாமல் இருக்கும் நிலை ஒன்று. அப்படியே இருந்து விட்டால் நாம் அறிய முடியாது. அவன் நம்மேல் கொண்ட கருணையால் இரங்கி, இறங்கி, மழை மேகமாகி, கீழே பொழிவது போல, அருள் பாலிக்கிறான்.

ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியான். தேவர்க்குக் கனவிலும் அரியவன். நாயிற்கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவன், மாசற்ற சோதி, நிலந்தன் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி ஆட்கொள்கிறான். **"நாயேற்கு நனவிலும் அருளினை போற்றி" "தன் அடியார்க்குத் தாயினும் நல்லன்" "எளிவந்த வான்கருணை"** அக்கருணை வாழ்க!



"ஒரு மனிதன் ஒரு கிணறு வெட்ட ஆரம்பித்தான். இருபது முழம் வெட்டியும் தண்ணீர் வராததால் வேறொரு இடத்தில் கிணறு வெட்டினான். முன்னிலும் ஆழமாய் வெட்டிய போதிலும் அங்கும் தண்ணீர் வராததால் அதை விட்டுவிட்டு, இன்னொரு இடத்தில் இன்னும் ஆழமாக வெட்டினான். அதிலும் தண்ணீர் கிடைக்கவில்லை. பிறகு வெறுப்புடன் கிணறு வெட்டுவதைக் கைவிட்டான். இப்படி மூன்று கிணறுகள் வெட்டிய ஆழம் நூறு முழம் இருக்கும். முதலில் வெட்டின கிணற்றிலேயே பொறுமையுடன் வெட்டியிருப்பானானால், தண்ணீர் கிடைத்திருக்கும். காரியம் ஸித்தியாகுமோ ஆகாதோ என்று சந்தேகம் கொள்ளாமல் ஒரே பொருளினிடத்து உறுதியான நம்பிக்கை வைத்து மனம் ஒருமைப்பட்டிருந்தால் ஜயமுண்டாவதற்குத் தடையேயில்லை."

**- சுவாமி பரமஹம்ஸர்**

# தைப்பூசத் திருவிழா

தைப்பூசம் என்றதும் அனைவரது நினைவுக்கும் வருவது இரண்டிடங்கள். ஒன்று வடலூர், மற்றது பழநி. வடலூரில் தைப்பூச சோதித் தரிசனக் காட்சியும் பழநியில் தைப்பூசக் காவடிச் சிறப்பும் பெருமைக்குரியன.


மாதந்தோறும் வரும் பூச நட்சத்திர நாளன்று வடலூரில் சோதித் தரிசனம் உண்டெனினும் அது தைப்பூசத்திற்கே உரிய சிறப்பைப் பெற்றது. அது போலவே நாளும் காவடியின் சிறப்பு பழநியில் உண்டெனினும் அது தைப்பூசத்திற்கே உரிய பெருமை பெற்றது. இந்த வகையில் இவ்விரு ஊர்களிலும் கொண்டாடும் தைப்பூசக்காரணத்தைக் கண்டு தெளியும் நிலையில் இக்கட்டுரை அமைகிறது.

1873 ஆம் ஆங்கில ஆண்டுக்கு நிகரான ஸ்ரீமுக ஆண்டு ஐப்பசித் திங்கள் 7ஆம் நாள் புதன்கிழமை காலையில் வடலூர் மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தில் இருந்த அன்பர்களுக்கு வள்ளலார் பேருபதேசம் செய்தார். தொடர்ந்து கார்த்திகைத் திங்களில் தமது அறைக்குள் இருந்த விளக்கை அறைக்கு வெளியே வைத்து அன்பர்களிடம் "உங்களுடைய காலத்தை வீணாகக் கழிக்காமல் நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து என்ற பாசுரத்தில் கண்டபடி இத்தீபத்தில் இறைபாவனையைச் செய்யுங்கள்" எனக்கூறி அறைக்கதவை மூடிக்கொண்டு இறைவனோடு இரண்டறக் கலப்பதற்கான சாதனையில் ஈடுபட்டார். இந்நிலையிலேயே மார்கழி மாதமும் கழிய, தைத்திங்கள் வந்ததும் 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை பூச நட்சத்திரத்து நிறைநிலா காயும் பௌர்ணமியன்று அறையை விட்டு வெளியில் வந்து அன்பர்களிடம் "இன்று உடம்பை மறைத்துக் கொள்ளப் போகிறேன். அருட்பெருஞ்சோதி ஆண்டவரை வழிபட்டு உய்யுங்கள்" எனக் கூறியபடிக் கதவைத் திருகாப்பிட்டவாறு சோதியில் இரண்டறக் கலந்தார். இதை உறுதிப்படுத்துமாறு அவரது அருட்பாவின் இறுதிப் பாடல் உள்ளதாக ஊரன் அடிகள் எழுதியுள்ள அடிகள் வரலாறு என்னும் நூலில் (3ஆம் பதிப்பு பக் 119-120) காணப்படுகிறது.

சோதியை வழிபட்டவர் சோதிமயமானார். ஆண்டவனைச் சோதி வடிவாகக் கண்டு வழிபடுவது இந்தியக் கோட்பாடு. வடநாட்டு வேள்விச் சடங்கில் நெருப்பு வடிவாகக் கடவுளைப் போற்றுவது வழக்கம். சிவனுக்குச் சூரியனும் சந்திரனும் இரு




தமிழாகரர் **தெ. முருகசாமி**
புதுச்சேரி

கண்களாயினும் அக்கினியை நெற்றிக் கண்ணாகக் கூறுவதும் வழக்கமாகும். ஒளிமயமான இம்மூன்றும் இருளை நீக்கி வெளிச்சம் தரத்தக்கவை. புற இருளைப் போக்கும் இவ்வெளிச்சத்தைப் போல அறியாமையாகிய அக இருளிருந்து ஆன்மா இறைவனாகிய வெளிச்சத்தில் ஐக்கியமாகும் போது உய்தி பெறும் என்பது தத்துவமாகும். இந்த அடிப்படையில்தான் வள்ளலார் அருட்பா அருள் விளக்க மாலையில் ஆண்டவனை, "அருள்விளக்கே, அருட்சுடரே, அருட்சோதிச் சிவமே" என்று கூறி வழிபடுகிறார். "அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி" என்பதே வள்ளலாரின் தாரக மந்திரம்.

மாணிக்கவாசகர் 'சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே' என்று ஆண்டவனைக் கண்டார். வள்ளலார் விளக்கு சுடர் சோதி என்றார். மணிவாசகர் சோதி சுடர் விளக்கு என்றார். இருவரும் ஒரே பரம்பொருளைச் சுட்டுவதாயினும் கூறும் முறையில் வேறுபாடன்றிக் கருத்தில் மாறுபாடில்லை.

விளக்கு - சிறுவெளிச்சம். சுடர் - பெருவிளக்கு.

சோதி - அகண்ட பெருவிளக்கு. அகண்ட பெருவிளக்கத்தைப் பேரொளி எனலாம். இப்பேரொளியாய் ஐக்கியமானவர் வள்ளலார். அவரது வாழ்க்கையின் தொடக்க நிலையில் விளக்குதான் அவரைப் படிப்படியே பேரொளி வாழ்க்கைக்கு அடையாளங்காட்டி அழைத்துச் சென்றது. அவர் கருங்குழி என்ற ஊரில் வாழ்ந்தபோது தண்ணீரில் விளக்கெரித்துக் காட்டினார். இதனைச் "சென்னை நண்பர்களே செப்பக்கேளிர் தண்ணீர் விளக்கும் எரிந்தது சந்நிதியின் முன்னே" என்ற அருள் நிலை விளக்கம் என்ற பகுதியில் பாடியுள்ளார். மேலும் அவர் திருமணம் கொண்ட முதலிரவில் விளக்கொளியில் திருவாசகம் படித்து உள்ளொளியைப் பெருக்கிக் கொண்டார் என்பது அவரது வரலாற்றின் முக்கிய செய்தியாகும். இப்படியாக விளக்கிலிருந்து அறிவுச் சுடரை விசாலப்படுத்திய அளவில் வள்ளலார் இறுதியில் சோதிப் பிழம்பானார். இந்த அனுபவத்தைத்தான் அவர் குறிப்பாக ஆண்டவனை விளக்கே, சுடரே, சோதியே என்றார்.

மணிவாசகர் தில்லையம்பலச் சோதியில் ஐக்கியமானாலும் முதன் முதலில் அவர் ஆண்டவனைத் திருப்பெருந்துறையில் சோதிமயமாகப் பார்த்தார். 'செந்தழல் புரை திருமேனியும் காட்டி' என்பது அவரது வாக்கு மேலும் குதிரை வாங்க வந்த வாதவூரரைச் சோதித் தரிசனம் காட்டி ஆட்கொண்ட அற்புதத்தோடே ஆண்டவன் அவரைத் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொள்ளவில்லை. உடனிருந்த அனபர்களைச் சோதியில் ஐக்கியப்படுத்திக் கொண்டாலும் 'கோலமார் தரு பொதுவினில் வருகென'க் கூறி என்னை இருப்பதாக்கினன் என முறையே கீர்த்தித் திரு அகவலிலும் (128) திருவண்டப் பகுதியிலும் (179) மணிவாசகர் கூறுவதிலிருந்து அவர் சோதியிலிருந்து தம் வாழ்வைத் தொடங்கினார் எனத் தெரிகிறது.

இப்படியாக அவரவர் வாழ்வின் அனுபவத்திற் கேற்ப ஆண்டவனை அனுபவிக்கும்போது மணிவாசகர் சோதி சுடர், விளக்கு என்றது ஒருவகையான இறங்கு முறைக்குறிப்பு. வள்ளலார் விளக்கு, சுடர், சோதி என்றது ஒருவகையான ஏறுமுறைக் குறிப்பு ஆறுகள் எல்லாம் ஒன்றாகக் கூடிக்கடலில் கலப்பதில்லை. அவை தனித்தனியே கடலைச் சென்றடைவதைப் போன்ற உண்மையில் வள்ளலாரும் மணிவாசகரும் சோதியை அனுபவித்தனரேயன்றி அவர்களுக்குள் மாறுபாடில்லை எனலாம்.

மேற்படியான இருவேறு வகைப்பட்ட கருத்தின் பொருத்தத்தைக் கார்த்திகைத் தீபக் காட்சியோடும் கந்தப் பெருமான் அவதாரத்தோடும் இணைத்து உணரலாம். கார்த்திகைத் தீப நாளில் வீடுகள் தோறும் பெண்கள் விளக்கேற்றுவர். அன்று மாலையில் கீழ்வானத்தில் முழுநிலவான சுடர் தோன்றும். அதே நேரத்தில் திருவண்ணாமலையில் அகண்ட சோதி ரூப தரிசனம் நிகழும். இப்படியாக விளக்கு சுடர் சோதி என்ற படிப்படியான நிலையில்தான் வடலூர் வள்ளலார் அருட்பெருஞ்சோதி ஆண்டவருடன் கலந்ததைத் தைப்பூசத்தின் முழுநிலவான வான்சுடர் தோன்றும் நாளில் வடலூர் சத்தியஞான சபையில் ஏழுதிரை நீக்கிக் காட்டும் விளக்கொளியில் கண்டு தரிசிக்கின்றோம்.

இவ்வுண்மையைக் கந்தபுராணம் முருகனது அவதாரமாகக் காட்டுகிறது.

**"அருவமும் உருவம் ஆகி**
**அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்**
**பிரமமாய் நின்ற சோதிப்**
**பிழம்பதோர் மேனி யாகக்**
**கருணைகூர் முகங்கள் ஆறும்**
**கரங்கள் பன்னிரண் டுங்கொண்டே**
**ஒருதிரு முருகன் வந்தாங்கு**
**உதித்தனன் உலகம் உய்ய."**

சிவபெருமானாகிய சோதிப் பிழம்பு தன் நெற்றியின் அக்கினிச் சுடரிலிருந்து முருகனாகிய தீப்பொறியை உண்டாக்கியது. இதில் சோதியும் சுடரும் தீப்பொறியும் ஒன்றே. இந்த முருகனாகிய பொறிதான் அடியார் உள்ளத்தில் 'மருவாய் மலராய், மணியாய், ஒளியாய்' உள்ளான், ஈண்டு கூறிய ஒளியை மணியின் ஒளியாகவும், விளக்கின் ஒளியாகவும் கொள்ளலாம். இப்படி சோதிக்கும் முருகனுக்கும் தொடர்பிருப்பதால் தான் தைபிறந்தால் வழிபிறக்கும் என்ற நம்பிக்கையில் உத்ராயணத் தொடக்கமாகிய தைத்திங்கள் முழுநிலா நாளை முருகனோடு சேர்த்துக் கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டது எனலாம்.



மேலும் இத்தைப்பூசத்தன்று தான் அன்னை உமாதேவி முருகனுக்கு வேல்தந்து தாரகனைக் கொன்று வர அனுப்பியதாகவும் தேலோக ஞானாசரியனாகிய வியாழ பகவானிடம் (பிரகஸ்பதி) முருகன் ஞானோபதேசம் பெற்று ஞான பண்டிதனாக ஆனான் என்றும் பழநித்தலபுராணம் கூறுகிறது. இதனையே 'ஞான பண்டிதசாமீ நமோ நம' என்றார் அருணகிரிநாதர். அறிவுத்தெளிவே (பிரகாசம்) ஞானம். அதன் விளக்கமே நிறைமதி நன்னாள். அதைப் பெற முயற்சிக்கும் கொண்டாட்டமே தைப்பூசப் பெருவிழாவாகும்.

# உலகம் உய்ய உதித்த உடையவர்



- சென்ற இதழ் தொடர்ச்சி...

மிகச் சிறந்த கருணை உள்ளம்கொண்ட ராமானுஜரின் புகழ் எட்டு திக்கிலும் பரவி, குருவை மிஞ்சிய சீடன் என்ற நிலை இயற்கையாகவே அமைந்து விட்டது.

இனி தொடர்ந்து ராமானுஜரின் வரலாற்றினை அறிந்து கொள்ளும் முன், ராமானுஜரின் உறவினர்களைப் பற்றி தெளிவாக தெரிந்தால் மட்டுமே, நன்றாக நினைவில் வைத்தால் மட்டுமே இராமானுஜரின் உறவினர்களை பல நிகழ்வுகளில் அவரோடு சம்பந்தப்படும்பொழுது, புரிந்துகொள்ள எளிதாக இருக்கும்.

**உறவினர்கள்**

1.கேசவ் சோமயாஜலு - ராமானுஜரின் தந்தை

2. காந்திமதி - ராமானுஜரின் தாய்

3. யுத்மதி - ராமானுஜரின் சித்தி

4. கமலநயனபட்டன் - சித்தி யுத்மதியின் கணவன்

5. பெரிய திருமலைநம்பி ராமானுஜரின் தாய்மாமன்

6. நாச்சியார் அம்மாள் - ராமானுஜரின் சகோதரி

7. தாமரையம்மாள் - ராமானுஜரின் மற்றொரு சகோதரி

8. முதலியாண்டான் - நாச்சியார் அம்மாளின் குமாரன்

9. நடாதூர் ஆழ்வார் - தாமரை அம்மாளின் குமாரன்

10. எம்பார், சிறிய கோவிந்தர் - ராமானுஜரின் சித்தி யுத்மதியின் மகன்கள்

11. ராமானுஜர், பிள்ளை திருமலைநம்பி, திருக்குழுகைபிரான் பிள்ளையான் - இந்த மூவரும் ராமானுஜரின் தாய் மாமன் பெரிய திருமலைநம்பியார் குமாரர்கள்

உறவு முறைகளை நாம் மனதில் நீங்காது வைத்து, இனி வருகிற நிகழ்வுகளை அறிந்து மகிழலாம்.

ராமானுஜரின் சிறிய தாயார் யுத்மதியின் மகனான கோவிந்தர், ராமானுஜருடைய பெருமையினை அறிந்து அவரை காணும் பொருட்டு, காஞ்சிபுரம் வந்தார். ஒருவரை ஒருவர் கண்டு மகிழ்ந்து, கோவிந்தரையும் தம்முடைய குருவாகிய யாதவ பிரகாசரிடம் அறிமுகம் செய்து அவருக்கு சீடராக்கி, இருவரும் யாதவ பிரகாசரிடம் தொடர்ந்து பயிற்று வந்தனர். கோவிந்தர், ராமானுஜர் பிறந்து நான்கு ஆண்டுகள் கழித்து கி.பி. 1021-ல் துர்மதி வருஷம், தை மாதம் புனர்பூசம் நட்சத்திரத்தில் அவதரித்தவராகும்.

யாதவ பிரகாசருக்கு இராமானுஜரின் புகழை ஜீரணிக்க முடியாமல் பொறாமை கொண்டு, இருக்கும் பொழுது, ஒரு பாடம் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது,

"கப்யாஸம் புண்டரீகம்" - என்று சாந்தோக்கிய உபநிஷத்தில் வரும் ஒரு வார்த்தைக்கு யாதவ பிரகாசர் கீழ்க்கண்டவாறு விளக்கம் கூறுகிறார்.

'கபி' என்றால் குரங்கு

'காப்யாஸம்' - குரங்கின் ஆசன வாய் போலே,

நாராயணனின் கண்கள் "குரங்கின் ஆசன வாய் போன்ற சிவந்த இரண்டு கண்கள்" என விளக்கம் கூறுகிறார்.

பெ. ராமநாதபிள்ளை, செயல் அலுவலர்

இதனை கேட்ட சீடன் ராமானுஜர் துடிதுடித்து போனார். உடனே குருவை நோக்கி "குருவே இது அவப்பொருள்" உண்மைப் பொருள் இதோ எனக் கூறி

க - என்றால் நீர்

கபி - நீரை உண்கிற சூரியன்


அவனால் மலருவது செந்தாமரை

எனவே சந்தோக்கிய உபநிஷத்தில் "கப்யாஸம் புண்டரீகம்" - என்பது சூரியனால் மலர்ந்த செந்தாமரை மலர் போன்ற இரண்டு கண்களை உடையவர் நாராயணன்" - இது தான் உண்மைப் பொருள் என்று நிலை நாட்டினார்.

**"எண்ணமும் கலைகள் வல்ல யாதவப்**
**பிரகாசன்பால்**
**நண்ணி ஓர் மறையோர் தந்த நான்மறை**
**தன்னில் இந்த**
**மண்ணில் மற்றொருவர் காணா வாக்கியத்**
**தத்தம் தன்னை**
**திண்ணமாய் உரைத்தான் என்றும் சீருரை**
**தேசமெங்கும்"**

(ஸ்ரீ இராமானுஜ வைபம் 282)

இந்நிகழ்வு சீடர்களின் முன்னிலையில் நிகழ்ந்ததால், யாதவ பிரகாசரின் பொறாமைத்தீ கொழுந்துவிட்டு எரியலாயிற்று. எனவே மற்ற சீடர்களிடம் ராமானுஜரை அவதூறாகப் பேசி, வேதனைப்பட்டார். குருவின் வேதனையினை தாங்க முடியாத சில சீடர்கள் குருவினுடன் சேர்ந்து ராமானுஜரை கொல்ல சதித் திட்டம் தீட்டினர்.



'உலகம் உண்மையானதே': 'இல்லை, பொய்யான மாயத்தோற்றம்,' 'உலகம் உணர்வுமயம்' 'இல்லை உலகம் இன்பமயம்' - இவ்வாறெல்லாம் விவாதிப்பதில் யாது பயன்? ஸ்தூல உலகை உண்மையென நோக்குவதை விட்டு அகன்று, தன்னுள் ஆழ்ந்து நிறு சொரூபத்தை அறிந்து, ஒருமை-இருமை நிலைகளினின்றும் சுழன்று, 'தான்' என்ற வயமிழந்து அகந்தை ஒழிந்த இயல்பு நிலையே அனைவர்க்கும் பொருத்தமானது.

**உலகுமெய் : பொய்த்தோற்றம்: உலகறிவ மற்றென்(று)**
**உலகுசுகம்: அன்னென்(று) உரைத்(து) என்**
**உலகுவிட்டுத்**
**தன்னை ஓர்ந்(து) ஒன்றிரண்டு தானற்று "நான்" அற்ற**
**அந்நிலைஎல் லார்க்கும்ஒப் பாம்.**

- ஸ்ரீ ரமண மகரிஷி

ராமானுஜரோ, நடந்ததை தன் தாயிடம் சொல்லி, மிகுந்த மனவருத்தம் அடைந்தார். யாதவ பிரகாசரை தம் குருவாக ஏற்க முடியாது என முடிவெடுத்து தன் வீட்டிலிருந்தே உண்மைப் பொருளை ஆராய்ந்தார்.

ராமானுஜரை கங்கை நதிக்கு அழைத்துச் சென்று, திரிவேணி சங்கமத்தில் தள்ளி, கொன்று விடவேண்டும். அவ்வாறு திரிவேணி சங்கமத்தில் தள்ளி விடுவதால் பாபம் நம்மை பிடிக்காது என திட்டமிட்டு, யாதவ பிரகாசர் ராமானுஜரை தம்மிடம் வரும்படி ஆள் அனுப்பினார்.

குருவின் அழைப்பினை ஏற்று, ராமானுஜர் யாதவ பிரகாசரிடம் வந்தார். யாதவ பிரகாசர் ராமானுஜரை புகழுவது போல "ராமானுஜரே நீர் அறிவுக்கடல், ஞானி, வேதவிற்பன்னர். மலைகளிலே நீர் இமயமலை போல உயரப் போகிறீர், உம்பிரிவு எம்மை வாட்டுகிறது" என நஞ்சினை நெஞ்சில் வைத்து நாவினில் அன்பு வைத்து, நல்லவர் போல் பேசுகிறார். எனவே பெரிய மனங்கொண்ட ராமானுஜர் மீண்டும் யாதவ பிரகாசரிடம் கல்வி கற்க தொடர்ந்து வந்தார்.

பின்னர் ஒரு நாள் யாதவ பிரகாசர் கங்கையின் பெருமையினை எடுத்துக் கூறி கங்கையில் நீராட தீர்த்த யாத்திரை செல்லலாம் எனக் கூற, ராமானுஜரும் குருவின் வஞ்சக எண்ணம் அறியாமல், தாயின் அனுமதி பெற்று, குருவும் மற்ற சீடர்களுடனும் தன் சித்தியின் மகன் கோவிந்தருடனும், ராமானுஜரும் கங்கைக்கு தீர்த்த யாத்திரை சென்றனர்.

அவ்வாறு செல்லும்பொழுது, விந்தியமலைப் பகுதியினை அடைந்தார். அடர்ந்த காடுகளுடன், துஷ்ட மிருகங்களும் வாழும் பகுதி வழியாக பயணம் சென்றது. இவ்வாறு பயணிக்கும் நாளில், யாதவ பிரகாசரின் சீடர்களில் ஒருவரும், ராமானுஜரின் சித்தி மகனாகிய தம்பியான கோவிந்தர் மூலம் "யாதவ பிரகாசர் மற்றும் பிற சீடர்களும் ராமானுஜரை கொல்லுவதற்கு சதி திட்டம் தீட்டியுள்ளார்கள்" - என்பதை ராமானுஜர் தெரிந்ததும், உடனே விந்திய காடுகளில் மறைந்து தனி வழி நடந்தார். யாதவ பிரகாசரும் மற்ற சீடர்களும், ராமானுஜரை காணாததால், காட்டு மிருகங்கள் கொன்றிருக்கும் என்றும், நாம் செய்ய வேண்டிய கொலையினை விதி செய்துவிட்டது என உள்ளுக்குள் மகிழ்ந்து, வெளியில் ராமானுஜரை காணவில்லையே என வருத்தப்படுவது போல, துக்கம் காட்டினார்கள். எனவே ராமானுஜர் இல்லாமல் அவர்கள் கங்கை பயணத்தினை தொடர்ந்தார்கள்.

(தொடரும்)


# திருமூலரின் யோகநெறியில் அம்பிகையின் துணை

மனித உடம்பின் படைப்பு அற்புதமானது. அண்டவெளியில் உள்ள சூரியனும் சந்திரனும், நமது உடம்பிலும் உள்ளன. பஞ்சபூதங்களும் உடம்பில் உள்ளன. சைவ தத்துவத்தின்படி, இவையாவும் மாயையின் ஒரு பகுதியாகிய அசுத்த மாயையிலிருந்து தோன்றுபவை.

தெய்வசக்தி உலகில் தோன்றும்போது, மாயையிலிருந்து தோன்றும் ஒரு வடிவமாகத்தான் விளங்கும். ஆனால், அதைச் சுத்தமாயை என்பர். இந்தத் தெய்வீக வடிவத்தை மனிதன், தன் உள்ளேயே - தனது சூக்கும உடம்பின் உள்ளேயே - காணமுடியும். இதற்கு வழிவகுத்துக் கொடுப்பது யோகநெறி.

**"தேடிக் கண்டுகொண்டேன் - திரு**
**மாலொடு நான்முகனும்**
**தேடித் தேடொணாத் தேவனை என்உள்ளே**
**தேடிக் கண்டு கொண்டேன்"**
(நாவுக்கரசர் தேவாரம் 4-9-12)

என்பார் திருநாவுக்கரசர்.



நாம் வழிபடும் சக்தி, சிவன் என்ற தெய்வங்களின் உருவங்கள் பலவாகும். இவர்கள் அருவமாகவும் உள்ளனர். சக்தியின் அருவத் தோற்றத்தில் ஒன்று, விந்து எனப்படும். சிவத்தின் அருவத்தோற்றத்துள் ஒன்று, நாதம் எனப்படும். இவை சுத்தமாயையிலிருந்து தோன்றுபவை. விந்து, நாதம் ஆகிய இரண்டு தெய்வீக அருவ வடிவங்களையும், யோகி தனது உடம்பில் உணருகின்றான்.

சக்தியின் அருளை அவன் எங்ஙனம் பெறுகிறான் என்பதைத் திருமூலர் விளக்குகின்றார்.

இதயத்தில் உள்ள அநாகதம் என்ற ஆதாரத்தில், நாதம், விந்து என்று இரண்டு அருவ தரிசனமும் யோகிக்குக் கிடைக்கும். அநாகதத்தில் அவன் உணர்ந்துகொள்ளும் அஜபா மந்திரமே நாததத்துவம். சிவனுடைய அருவம் இது. இதிலிருந்து பிறப்பதுதான் பஞ்சாட்சரம். இதைச் சூட்சம பஞ்சாட்சரமாக - "சிவாயநம" என்று தியானம் செய்வதால், சிற்சக்தி, விந்து தத்துவமாக - (அருவமாக) அங்கு எழுந்தருளுவாள். உண்மையில், உலகில் சக்திதான் எல்லாம், அவள் இல்லாத இடமே இல்லை. ஆனாலும் யோகியின் சூட்சுமதேகத்தில், அவன் உணரும்படியாய் அவள் எழுந்தருளுவது, சுத்த மாயையின் காரியமாகிய விந்து தத்துவமாகத்தான். இது அவளுடைய தெய்வீகத் தோற்றங்களுள் ஒன்று.

நாதமும், விந்துவும் ஒரே ஆதாரத்தில், யோகிக்கு அனுபவம் ஆவதைத் திருமூலர்.

**"தான் எங்குளன், அங்குளள் தையல்,**
**மாதேவி,**
**ஊன் எங்குள, அங்கு உளஉயிர் காவலன்,**
**வான் எங்குள, அங்கு உள அந்த மாருதம்**
**கோன் எங்கும் நின்ற குறிபல பாரே"**
(திருமந்திரம் 1045)

என்று பாடுவார்.



டாக்டர். திருமதி. **இராதா தியாகராஜன்**
எம்.ஏ., பிஎச்.டி.,

யோகி தனது சாதனையை மேலும் தொடர்ந்து செய்தால், சக்தி தியானத்தில், சமாதி கைகூடும். இது கைகூடும் வகையைத் திருமூலர் விளக்குகின்றார்.

யோகிகளுள், இந்த நிலைக்கு வராமல், திசை தவறிப் போகின்றவர்கள் உண்டு. அவர்கள் பக்தியின் அடிப்படையில் வராதவர்கள். அவர்களைப் பற்றித் திருமூலர்.

**"நூல் ஒன்று பற்றி நுனி ஏறமாட்டாதார்**
**பால் ஒன்று பற்றினால் பண்பின் பயன் கெடும்**
**கோலொன்று பற்றினால் கூடா பறவைகள்**
**மாலொன்று பற்றி மயங்குகின் றாரே"**

(திருமந்திரம் 462)

என்பார். சிற்சக்தியின் துணையாகிய கோலைப் பிடித்துக் கொண்டு ஓங்கினால். இந்திரியப் பறவைகள் ஓடிவிடும். ஆனால் இவர்கள் (மயக்க உணர்வால், இவ்வழியை அறியாமல், வேறு எதை எதையோ பற்றிக்கொண்டு அலைகின்றார்கள்). புலன்களுக்குத் தப்பமுடியாமல் யோகப் பயனை இழக்கின்றார்கள் என்று கூறுகின்றார்.

மனம் புலன்களில் மயக்கமுற்று - அலையும் வரை சமாதிநிலை கைகூடாது. பக்தியினால் கசிந்துருகி, யோகநெறியைக் கைக்கொள்ளுவதால்தான் பிராணவாயு அடங்கும். அதனோடு சம்பந்தம் உடைய மனமும் அடங்கும். மனம் நன்கு அடங்க வேண்டுமானால், ஆன்மாவின் உணர்வு விழித்தெழ வேண்டும். ஆன்ம உணர்வைத் திருமூலர், "மன்மனம்" என்பார். மன் மனத்திற்குள் மனம் லயமாக வேண்டும் என்பார். இதற்கு வழி யாது?

ஆன்ம உணர்வு, நிலையாக உள்ள இடம், நமது புருவமத்தி. அந்த உணர்வைத் தட்டியெழுப்ப வேண்டும். அதற்கு, மூலக்கனல், அநாகதத்தை விட்டு மேலே ஏறவேண்டும். சிற்சக்திதான் அதை ஏற்றமுடியும். அதை ஆணை என்ற ஆதாரத்திற்கு ஏற்ற வேண்டும். இது அபூர்வமான சாதனை.

இந்தச் சாதனை கைகூடினால், விந்து தத்துவம், புருவமத்தியில், ஒளியாகத் தோன்றும். அது குளிர்ந்து இருக்கும். அதனோடு கூடவே, நாததத்துவத்தையும், புருவமத்தியில் தரிசிக்க வேண்டும். அதுவும் விந்துவின் ஒளியுடனே கலக்கும். விந்துவைச் சந்திரன் என்பர். நாதத்தைச் சூரியன் என்பர். இந்த இரண்டும் சேர்வதாகிய ஒளி, மூலக்கனலுடன் இணைந்து பேரொளியாகத் தரிசனம் தரும். இதை வள்ளலார் "மூச்சுடர்" என்றார்.

**"மூச்சுடர் களும் ஒளி முயங்குற**
**அளித்தருள்"**

என்பது அவர் வாக்கு. இதை மந்திர வடிவமாகச் "சிவாய" என்று கூறுகின்றார். <u>சி</u> என்பது சிவம். <u>வா</u> என்பது சக்தி. <u>ய</u> என்பது ஆன்மா. இதைத் திருமூலர்,

**"விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடின்**
**சந்தியில் ஆன சமாதியில் கூடிடும்**
**அந்தம் இலாத அறிவின் அரும்பொருள்**
**சுந்தரச் சோதியும் தோன்றிடும் தானே"**

(திருமந்திரம் 612)

என்று பாடுவார்.

இந்நிலையில் யோகி, தனது ஆன்ம உணர்வு விழித்தெழப் பெறுகின்றான். சிவத்தின் சார்பில் ஆன்மாவின் அறிவு பேரறிவாக வளரும். அப்பேரறிவால் காண்பதே சுந்தரச் சோதி வடிவில் விளங்கும் இறைவடிவம். சமயநெறியில் சிவம் குருவாக வந்து உபதேசம் செய்வதை, யோகி அனுபவத்தில் காணும் முறை இது. இதைப்பற்றித் திருமூலர் மேலும் பாடுகின்றார்.

**"விந்துவும் நாதமும் மேவி உடன்கூடிச்**
**சந்திர னோடே தலைப்படும் ஆயிடின்**
**அந்தர வானத்து அமுதம் வந்து ஊறிடும்**
**அங்குதி மந்திரம் ஆகுதி யாமே"**

(திருமந்திரம் 952)


இதில் "சந்திரன் என்பது சந்திரமண்டலம். நமது நெற்றிக்குச் சந்திரமண்டலம் என்று, யோக நூலில் பெயர். **"அந்தரவானத்து அமுதம் என்பது"**, சிவஜோதி தரிசனத்தால் வரும் ஆனந்தம்: பரஞானம் பெறுவதால் வரும் ஆனந்தம்: இந்தப் பரஞானம் சூக்கும தேகத்தில் அனுபவமாகக் கிடைப்பதால் விளையும் இன்பம். இது, பரம்பொருளை உணர்வதற்கு ஒரு தொடக்கம்தான். யோக சாதனை மேலும் தொடரவேண்டும். ஆணை என்ற ஆதாரத்தில் பொருந்திய மூலக்கனலைச் சிவத்தின் அருளால், சிவக்கனலாக மாற்றி வளர்க்க வேண்டும். அதற்குப் பஞ்சாட்சரத்தைத் தியானித்து, சமாதி கூடி, இடைவிடாது பயில வேண்டும். அந்தச் சிவக்கனலில், நமது பந்தபாசம் ஆகிய பற்றுக்களை ஆகுதி செய்ய வேண்டும். இதைத் திருமூலர், **"அங்கு உதி மந்திரம் ஆகுதியாமே"** என்று குறிப்பிடுகின்றார்.

சிவ தத்துவ மாகிய நாதமும், சக்தி தத்துவ மாகிய விந்துவும் யோகிக்கு ஒரே ஆதாரத்தில் அனுபவமாகும். இதைத் திருமூலர்.

**"தான் எங்குள்ளது அங்குளது ஐயன்**
**மாதேவி"**

என்று விளக்குகின்றார். யோக நெறிக்கு சக்தியாகிய அம்பிகையின் துணை வேண்டும் என்று இக்கட்டுரை விளக்குகின்றது.

# தொழுது வென்றார்!



சேக்கிழார் என்னும் தெய்வப் பாக்கிழார் செய்தது திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம். இது பக்தியின் பாலராகி பரமனுக்கும் ஆளாம் அன்பர் அறுபத்து மூவரின் அரிய வரலாறு கூறுவது. கைதேர்ந்த சிற்பி ஒருவனைப்போல சேக்கிழார் பெருமான் ஒவ்வொரு நாயன்மார் வரலாற்றையும் சொல்நயமும் பொருள் நயமும் மிக்கதாகச் செதுக்கியுள்ளார். அதிலே ஓர் ஒப்பற்ற வர்லாறு மெய்ப்பொருள் நாயனார் வரலாறு.

திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர் மெய்ப்பொருள் நாயனார். ஒப்பாரும் மிக்காரும் அன்றி உயராட்சி செய்தவர். எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே என்பதற்கேற்ப அரியணை அமர்ந்து ஆட்சி செய்தபோதும் சித்தத்தைச் சிவனிடத்தும் அவன் அடியாரிடத்தும் வைத்தவர்.

**'மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்**
**ஆலயம் தானும் அரசனைத் தொழுமே'**

என்பதனால் சிவவேடம் பூண்டாரைக் கண்டால் சிவமாகவே எண்ணி வழிபடுபவர். மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனப் போற்றி வாழ்ந்தவர்.

முத்தநாதன் என்னும் பெயருடையான் கருநாடக வேந்தன் பேராசை கொண்டவன். மண்ணாசை மிக்கவன்.

மெய்ப்பொருள் நாயனாரின் வளமும் நலமும் கண்டு பொறாமை கொண்டான். அதனால் மெய்ப்பொருள் நாயனாரின் நாட்டைக் கைப்பற்றக் கருதினான். பலமுறை பெரும்படையுடன் வந்து போரிட்டான். ஒவ்வொரு முறையும் தோற்று அவமானப்பட்டுப் போனான்.

வாள்வலியாலும், தோள் வலியாலும் மெய்ப்பொருளாரை வெல்ல முடியாது என்பதைப் புரிந்து கொண்டான். எனவே அவரை வஞ்சகமாகக் கொல்லக் கருதினான்.

**"மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்"** எனக் கருதும் நாயனாரின் நம்பிக்கையைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டான்.

உடம்பு முழுவதும் திருநீறு பூசிக் கொண்டான். சடைகள் முடித்துக் கட்டிக் கொண்டான். கைகளில் கொலைக் கருவி மறைத்து வைக்கப் பெற்றுள்ள சுவடியை ஏந்திக் கொண்டான்.

செஞ்சுடர் நடுவே மைநிறத்தை மறைத்துக் கொண்டுள்ள விளக்குப் போல வஞ்சனையை மனத்தில் மறைத்துக் கொண்டு மெய்யடியாரைப் போல வேடம் பூண்டான். நாயனாரின் அரண்மனைக்குள் புகுந்தான்.


இதனை:

**"மெய்யெலாம் நீறு பூசி**
**வேணிகள் முடித்துக் கட்டி**
**கையினிற் பரிடக ரந்த**
**புத்தக் கவளி ஏந்தி**
**மைபொதி விளக்கே என்ன**
**மனத்தினுள் கறுப்பு வைத்துப்**
**பொய்த்தவ வேடங் கொண்டு**
**புகுந்தனன் முத்த நாதன்"**

எனச் சேக்கிழார் பெருமான் படம் பிடித்துக் காட்டுகிறார்.

தடைகள் பல கடந்து அந்தப்புரம் வந்தான் முத்தநாதன். அங்கு தத்தன் என்னும் மெய்க்காப்பாளன் நின்றிருந்தான்.

தத்தன் ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் அவரது குண



புலவர் மு. இராசரத்தினம்

இயல்பை அறிந்து கொள்ளும் ஆற்றல் உடையவன். முத்தநாதன் பொய் வேடம் புனைந்திருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டான் ஏதோ தீய நோக்கத்துடன் வந்திருக்கிறான் என்பதையும் புரிந்து கொண்டான்.

எனவே அவனை அந்தப்புரத்தினுள் நுழையாதவாறு தடுத்து நிறுத்த வேண்டும் என முடிவு செய்தான்.

'அரண்மனையில் எந்த இடத்திலும் சிவனடியார்களைத் தடுத்து நிறுத்துதல் கூடாது' என்ற அரசனது ஆணையையும் நினைந்தான்.

அரசர் துயின்று கொண்டிருக்கிறார். அவரைக் காண்பதற்கு இது ஏற்ற நேரமல்ல என்று சாமர்த்தியமாகக் கூறித் தடுத்து நிறுத்த முயன்றான்.

ஆனால் அவன் வார்த்தையைப் பொருட்படுத்தாது அவனை விலக்கி உள்ளே புகுந்து விட்டான் முத்தநாதன்.

உள்ளே புகுந்த முத்தநாதனைக் கண்ட அரசமாதேவியார் துணுக்குற்று எழுந்தார். துயின்று கொண்டிருந்த நாயனாரை அவசரமாக எழுப்பினார்.

விழித்தெழுந்த நாயனார் தம்முன்னே நிற்கும் முத்தநாதனைக் கண்டார். அவன் பூசியுள்ள திருநீறு அணிந்துள்ள உருத்திராச்சம், தாங்கியுள்ள சடைமுடி ஆகியவற்றைக் கண்டார் மெய்யடியார் என நினைந்து எதிர்வந்து வணங்கி வரவேற்றார்.

'மங்கலம் பெருக மற்றென் வாழ்வு வந்து அணைந்தது' என்று கூறி, 'இங்கு' எழுந்தருளப் பெற்றது என்கொல்! 'அடியேனால் ஆக வேண்டியது என்னவோ!' எனப் பணிந்து வேண்டினார்.

'உங்கள் இறைவன் சொன்ன ஆகமம் ஒன்று. உலகில் வேறு எங்கும் இல்லாதது என்னிடம் உள்ளது. அதை உனக்குச் சொல்லவே வந்தேன்' என்றான் முத்தநாதன்.

'நான் பெரும்பேறு பெற்றவன். அதனை எனக்குச் சொல்லியருள வேண்டும்' என வேண்டினார் மெய்ப்பொருளார்.

'மாது தவிர நீயும் நானும் தனியிடத்து இருக்க வேண்டும்' என்றான் வஞ்சகனான முத்தநாதன்.

உடனே அரசியாரை அப்புறம் போகப் பணித்தார் நாயனார்.

முத்தநாதனை ஆசனத்தில் இருத்தினார். தாம் கீழே இருந்து 'இனி அருள் செய்யும்' என்று தாழ்ந்து பணிந்து வேண்டினார்.

இப்போது முத்தநாதன் புத்தகத்தைத் திறப்பவன் போலப் பாவனை செய்து உள்ளே மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்தான் கண்ணிமைக்கும் நேரத்தில் பணிந்து இருந்த மெய்ப்பொருளாரைக் குத்திவிட்டான்.

குருதி குபுகுபு எனக் கொட்டுகிறது. இந்த நிலையிலும் **'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்'** எனக் கூறி வணங்கியபடியே கீழே சாய்கிறார் நாயனார்,

இந்த நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமான்,

**"கைத்தலத் திருந்த வஞ்சகக்**
**கவளிகை மடிமேல் வைத்துப்**
**புத்தகம் அவிழ்ப்பான் போன்று**
**புரிந்தவர் வணங்கும் போதில்**
**பத்திரம் வாங்கித் தான்முன்**
**நினைந்தஅப் பரிசே செய்ய**
**மெய்த்தவ வேட மேமெய்ப்**
**பொருளெனத் தொழுது வென்றார்"**

என மனம் நெகிழ்ந்து குறிப்பிடுகின்றார்.

முத்தநாதன் மெய்ப்பொருளாரை கத்தியால் குத்தி விட்டான் என்று சொல்ல சேக்கிழார் பெருமானுக்கு மனம் இடந்தரவில்லை **'தான் நினைந்த அப்பரிசே செய்தான்'** என்று கூறுகிறார்.

ஏனாதிநாயனார் வரலாற்றிலும் படுபாதகனான அதிசூரன் செய்த கொலைச்செயலை

**'முன்நின்ற பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான்'** என்றே குறிப்பிடுகிறார்.

சேக்கிழார் பெருமானின் அருள்நெஞ்சத்தை நினைக்கும் போது நம் நெஞ்சம் நெகிழ்கிறதல்லவா?

நாயனாரை வஞ்சகமாகக் கொல்ல வேண்டும் என்று நினைத்து வந்தவன் முத்தநாதன். தான் நினைத்ததைச் செய்தும் முடித்துவிட்டான்.

அப்படியானால் அவன்தானே வென்றவன்? அவனைத் தானே வென்றான் என்று கூற வேண்டும் 'அதுதானே சரி.'

அதை மாற்றி தொழுது வென்றார் என மெய்ப்பொருளார் வென்றதாகக் கூறுகிறாரே! சேக்கிழார் பெருமான்

இது சரியா?

மெய்ப்பொருள் வரலாற்றில் பொய்ப்பொருளா?

இருக்காது! சேக்கிழார் வாக்கு ஒருக்காலும் பொய்யாக இருக்காது!

'வென்றார்' என்னும் இந்தச் சொல்லில் ஏதோ நுட்பம் ஒளிந்து கொண்டிருக்கிறது. அதை நாம் கண்டுபிடித்தாக வேண்டும்.

'வாள்வலியும் தோள் வலியுமே வீரம்' என்று

நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். அதனினும் சிறந்த வீரம் ஒன்று உண்டு! அது உள்ளத்தின் வலிமையாம்!

ஐம்புலன்களை அதனதன் வழியே செல்லவிடாமல் அடக்கும் வலிமையே மெய்யான வலிமை என்று கருதியிருக்கிறார்கள் சான்றோர்கள்.

அதனால்தான் 'புலனைந்தும் வென்றான் தன் வீரமே வீரம்' என்று பேசியிருக்கிறார்கள்.

முத்தநாதன் தன்னைக் குத்தியபோது மெய்ப்பொருளார் 'ஐயோ' என்று அலறவில்லை 'அம்மா' என்று கத்தவில்லை. **'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்'** என்று கூறி குத்தியவனை வணங்கியபடியே கீழே சாய்ந்திருக்கிறார்.

இது யாராலும் செய்ய இயலாத செயற்கருஞ் செயலாகும். அதனால்தான்: தான் நினைத்ததைச் செய்து முடித்த முத்தநாதனை வென்றான் எனக் கூறாது கீழே சாய்ந்து உயிர்விட்ட நாயனாரை வென்றார் எனக் கூறியுள்ளார் சேக்கிழார் பெருமான்

என்னே! சேக்கிழார் பெருமானின் நுண்மாண் நுழைபுலம்!.



# எண்ணச்சிதறல்




மனக்குறை போக்கும் மயிலம் முருகன் என்ற கட்டுரையில் வெளியாகியிருந்த மயிலம் முருகனின் அருட்சிறப்புக்கள் பற்றிய தகவல்களும், அந்த ஆலயத்தின் தொன்மைமிகு ஸ்தல வரலாறும், மெய்சிலிர்க்க வைத்திருந்தன. அதேசமயம், இதுகாறும் இந்த அற்புத ஆலயத்திற்கு சென்ற வராத என் போன்ற முருகனடிமைகளை, நாம் எப்போது மயிலம் சென்று வேலவனைக் கண்குளிர தரிசிப்பது என்ற ஆவலைப் பெரியதும் தூண்டியிருந்தது, ஆலயம் பற்றிய கட்டுரையும் படங்களும்.

ஸ்ரீரங்கம் அருள்மிகு நம்பெருமாளின் அழகிய அட்டைப்படம் பலரது பூஜை அறையை அலங்கரிக்கத்தக்க வகையில் இருந்தது.

**இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.**

முருகப் பெருமான் மணக்கோலத்தில் நிரந்தரமாக குடிகொண்ட மயிலமலை எனப்படும் 'மயிலம்' திருத்தலத்தின் சிறப்புக்களை விவரித்த கட்டுரை மயிலம் சென்று மயில் வாகனப் பெருமானை தரிசித்த மகிழ்வை அளித்து விட்டது. வண்ணப்படங்கள் எண்ணத்தைக் கொள்ளை கொண்டு விட்டன!

கோவை மாநகரில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் தண்டு மாரியம்மன் திருத்தலத்தின் மகத்துவங்களை மகத்தான வரலாற்றை விவரித்த கட்டுரை அகிலம் காத்திடும் அந்த அன்னை பராசக்தியை கண்டு தரிசித்த பரவசத்தை அளித்து விட்டது!

**த. சத்தியநாராயணன், அயன்புரம்**

# பரிக்கல் அருள்மிகு இலட்சுமி நரசிம்மர் திருக்கோயில்



தமிழகத்திலுள்ள நரசிம்மர் திருத்தலங்களில் பரிக்கல் இலட்சுமி நரசிம்மர் திருக்கோயில் சிறப்பு பெற்ற பழமை வாய்ந்த பிரார்த்தனை தலம் ஆகும்.

**திருக்கோயில் அமைப்பு**

நான்கு புறங்களிலும் மாட வீதிகள் சூழ்ந்திருக்க நடுவே மிக அழகாக கோயில் அமைந்துள்ளது. கிழக்கு திசையை நோக்கி முன்புற வாயிலும், கருவறையும் அமைந்திருக்கின்றன.

**தல வரலாறு**

பரிகலாசூரன் என்னும் அசுரனை நரசிம்மப் பெருமான் வதம் செய்த திருத்தலமாக பரிக்கல் திருத்தலம் புகழ் பெறுகிறது.

அதிராஜ மங்கலபுரம் எனும் பழம் பெயருடைய திருவதிகைப் பகுதியில் தங்கம், வெள்ளி, இரும்பாலான கோட்டைகளை அமைத்து மூன்று புறங்களிலும் ஆண்டு வந்த தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் மூன்று அசுரர்கள் இமையோர்களைத் துன்புறுத்தி வாழ்ந்து வந்தனர். மூன்று அசுரர்களையும், அவர்களது முப்புரக் கோட்டைகளையும் சிவபெருமான் எரித்துச் சாம்பலாக்கினார். இத்திரிபுர தகனத்திற்கு திருமால் அம்பாக இருந்து உதவினார் என்கிறது திருவதிகைப் புராணம்.

இம்மூன்று அசுரர்களுக்கு தளபதியாக இருந்த பரிகலாசூரன் தப்பித்துச் சென்று பஞ்ச கிருஷ்ணாரண்யங்களில் ஒன்றான 'திருமுதுகுன்றம்' (இன்றைய விருத்தாசலம்) பகுதிக்குள் மறைந்து கொண்டான்.

இப்பகுதியை திருமால் பக்தனான வசந்தராஜன் என்ற குறுநில மன்னன் ஆண்டு வந்தான். பரிக்கல் பகுதியும் இம்மன்னனின் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

வசந்தராஜன் பரிக்கல் பகுதியில் நரசிம்மருக்கு திருக்கோயில் எழுப்புவதென்று முடிவு செய்து, தன்னுடைய ராஜகுருவான வாமனதேவரிடம் ஆலோசனை பெற்று திருப்பணிகளைத் தொடங்கினான். அதற்காக யாகம் நடத்தப்பட்டது. யாகம் தொடங்குவதற்கு முன் அரசரின் பாதுகாப்புக் கருதி 'அராக்ஷர அமிர்தராக்ஷர' என்ற மந்திரத்தை வசந்தராஜனுக்கு போதித்து கூப்பிடும் தூரத்தில் அமர வைத்தார். 'அசம் பிரக்ஞும்' என்ற ஞானநிலையை அரசனுக்கு போதித்தார் எந்த சூழ்நிலைகளையும் உணராமல், எதைக் கண்டும் கலங்காமல், கொண்ட குறிக்கோள் ஒன்றினையே நோக்கமாகக் கொண்ட - உணர்விழந்த சமாதி நிலைக்கு 'அசம் பிரக்ஞும்' என்ற பெயராகும். என்றாலும் மந்திர உச்சாடனங்களை மட்டும் சமாதி நிலையிலிருப்பவர் சொல்லிக் கொண்டிருக்க முடியும்.

யாகம் தொடங்கிய சில நாழிகைக்குள் தன் மாயப் படைகளுடன் அங்கு வந்த பரிகலாசூரன் யாகத்தை சிதைக்க ஆரம்பித்தான். குதிரை முகமும், மனித உடலும் கொண்ட இவ்வசுரன் வானத்தில் பறக்கும் சக்தி பெற்றவனாதலின் அவனை எவராலும் ஒன்றும் செய்ய இயலவில்லை. மேலும் விண்ணிலும் மண்ணிலும் உயிர் பிரியாதிருக்க பிரம்மனால் வரம் பெற்றவன் இவன்.

வசந்தராஜனை தேடிப்பிடித்து கோடரியால் வசந்தராஜன் தலையை பிளக்கிறான். அவ்வாறு பிளந்த தலையிலிருந்து உக்கிரம் கலந்த கோபக்கனல் பறக்க ஸ்ரீ சிங்கபிரான் தோன்றி எதிர்நின்ற பரிகலாசூரனின் உடலை இரண்டாக பிளந்தெறிந்தார்.

நரசிம்மப் பெருமானின் திருவருளால் வசந்தராஜன் உயிர்ப்பித்தெழுந்தான். வசந்தராஜன் நரசிங்கப் பெருமானின் அகோர விசுவரூபத்தைத் தரிசித்து மகிழ்ந்தான். பெருமானே! அடியவர்களின் மனங்களை கலங்கச் செய்யும் இந்தக் கோப உக்கிரம் பொதிந்த திருவுருவத்தை மக்கள் துதிப்பதும் ஆராதிப்பதும் அரியதாகிவிடும். இன்முகம் காட்டும் சாந்த சொரூபராக என் அன்னை திருமகளோடு எழுந்தருள வேண்டுகிறேன்" என்று வசந்தராஜன் விழுந்து

புதுப்பேட்டை. வ. கோவிந்தன், எம்.ஏ.,

வணங்க ஸ்ரீ சிங்கபெருமான் சாந்த சொரூபராக அவதாரம் கொண்டு ஸ்ரீ இலட்சுமி நரசிம்மராக காட்சியளித்தார் என்பது இக்கோயிலின் தலப்புராணமாகும்.

**மூலவர்**

மூலமூர்த்தி ஸ்ரீ இலட்சுமி நரசிம்மர். கருவறையில் மூலமூர்த்தியின் இடப்பக்கத்தில் வியாசராசர் என்பவரால் பிரதிட்டை செய்யப் பெற்றதாகக் கூறப்படும் ஆஞ்சநேயர் சிலை உள்ளது இவர் மூலமூர்த்தியைப் போன்றே 'சான்யத்தம்' என்று கூறப்படும் தெய்வீக சக்தி குடிகொண்ட ஆஞ்சநேயராகக் கருப்படுகிறார்.

உட்புறத் திருச்சுற்றில் தென்மேற்கில் ஸ்ரீ கனகவல்லித் தாயார் சந்நிதியும், வடமேற்கில் ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் மற்றும் வீர ஆஞ்சநேயர் சந்நிதியும், வடக்கில் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் சந்நிதியும் அமைந்துள்ளன.

இரண்டாம் திருச்சுற்றில் தெற்கில் ஆஞ்சநேயர் சந்நிதி தென்கிழக்கில் நாகதூபக் கிணறும் மடப் பள்ளியும், தென்மேற்கு கன்னி மூலையில் ஸ்ரீ வரசித்தி விநாயகர் சந்நிதியும் அமைந்துள்ளன.

கோயிலின் எதிர்புறம் ஸ்ரீ கருடாழ்வார் சந்நிதி, கொடி மரம், பலிபீடம் உள்ளன.

**கல்வெட்டுகள்**

இத்திருக்கோயிலின் கல்வெட்டுகள் அதிகம் இருந்து மறைந்து போய் உள்ளன.

சிங்கப் பெருமானுக்கு ஞாயிற்றுக்கிழமையில் நடந்த ஓர் திருநாளுக்கு (உற்சவத்திற்கு) நிலம் தானமாக அளிக்கப்பட்ட செய்தி ஒரு கல்வெட்டுத் துண்டில் உள்ளன. இது 'கோனேரின்மை கொண்டான்' எனும் பாண்டிய மன்னர் காலத்தியது.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் சேந்தமங்கலத்திலிருந்து அரசாண்ட அழகிய பல்லவன் கோப்பெருஞ்சிங்கன் காலத்திய கல்வெட்டு ஒன்று தானத்தை கூறுவதாக உள்ளது.

மா, அரைமா என்ற நில அளவுகளைக் கூறும் ஒரு கல்வெட்டுத்துண்டு நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகக் கூறுகிறது.

சுவாமியின் திருவிடையாட்டத்திற்கும். திருநாளுக்கும் ஆகும் செலவினங்களுக்காக பாக்கு, மா, பலா, தென்னை மரங்கள் கொண்ட 'நாலு கு மா' நிலத்தை தானமாகக் கொடுத்த செய்தியை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது.

மேலும் பல கல்வெட்டுத்துண்டுகள் தனித்தனியே காணப்படுகிறது.

**தெய்வீகச் சிறப்புகள்**

ரொணம் = கடன்: ரோகம் = நோய்: சத்ரு = எதிரி ஆகிய முக்குணங்களை போக்கும் வல்லமை பெற்ற திருத்தலம் என்பதே இத்தலத்தின் சிறப்பம்சமாக போற்றப்பெறும் தெய்வாம்சமாகும்.

**திருவிழாக்கள் - உற்சவங்கள்**

ஆண்டுதோறும் சித்திரை - வைகாசி மாதத்தில் 11 தினங்கள் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது.

வைகாசி விசாகம், ஆனித் திருமஞ்சனம், ஆடிப்பூரம், கிருஷ்ண ஜெயந்தி, நவராத்திரி, தீபாவளி, மகாவிஷ்ணு தீபம், வைகுண்ட ஏகாதசி, மாட்டுப் பொங்கல், மாசி மகம், பங்குனி உத்திரம் போன்ற உற்சவங்கள் நடைபெறுகின்றன.

**சுவாதி நட்சத்திரம்**

ஒவ்வொரு மாதம் சுவாதி நட்சத்திரம் அன்று மாலை 5 மணிக்கு சிறப்பு திருமஞ்சனம் நடைபெறுகிறது. பின்பு அலங்காரத்துடன் கோயிலின் 2-ஆம் திருச்சுற்றில் பெருமாள் வலம் வரும் திருக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

**ஆகமம்**

வைகானஸ ஆகம விதிமுறைப்படி இத்தலத்தில் பூஜைகள் நடைபெறுகின்றன.

**அமைவிடம்**

விழுப்புரம் - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் விழுப்புரத்திற்கு தெற்கே 22 கி.மீ. தொலைவிலும், கெடிலத்திற்கு வடக்கில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் பரிக்கல் சாலையின் முகப்பில் மேற்கு நோக்கி ஸ்ரீ இலட்சுமி நரசிம்மரை கைகூப்பி வணங்கியபடி நிற்கும் ஸ்ரீ ஆஞ்சநேயர் சிலைக்கு எதிர்புறம் மேற்கே 3 கி.மீ. தொலைவிலும் இத்திருத்தலம் அமைந்துள்ளது.



**நடைதிறப்பு**

காலை 6.00 மணி முதல் பகல் 1.00 மணி வரை

மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

கடன், நோய், எதிரி ஆகிய முக்குணங்களை போக்கும் கண்கண்ட பலன்களைத் தரும் தெய்வ சந்நிதியான பரிக்கலுக்குச் சென்று ஸ்ரீ இலட்சுமி நரசிம்மரை வணங்குவோர்க்கு எல்லா நலன்களும் கிட்டும் என்பது கண்கூடான உண்மை.

## பொருட்காட்சியில்

# இந்து சமய அறநிலையத்துறை அரங்கு



சென்னை தீவுத்திடலில், 34-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், இந்து சமய அறநிலையத்துறை பங்கேற்பது குறித்து துறை அலுவலர்களையும், கற்றறிந்தோரையும், தொழில்நுட்ப வல்லுனர்களையும் பலமுறை சந்தித்து கலந்துரையாடல் செய்யப்பட்டது. அதன் பயனாக நமது துறையின் அரங்கில் 42 அடி உயர மூன்று நிலை இராஜகோபுர முகப்புகள் அமைக்கலாம் எனவும், முகப்பில் வடிவுடையம்மன், திருவுடையம்மன், கொடியிடையம்மன் ஆகிய மூன்று பெண் தெய்வங்களையும் அமைக்கலாம் எனவும், அரங்கின் உள்ளே சிறிய ஆலயம் ஒன்று அமைத்து அதனைச் சுற்றி தங்கரதம் ஒன்று ஓடுதல் போல அமைக்கலாம் எனவும், அவ்வாலயத்தின் மீது விமானம் ஒன்று ஏற்படுத்தி அதனை பழுதுபார்த்து செப்பனிடுவதுபோன்ற அமைப்பினை ஏற்படுத்தலாம் எனவும் எண்ணி அதனைப் படமாக வரைந்து ஆணையர் அவர்களிடத்தில் விளக்கியபோது இந்த எண்ணம் நிறைவேறினால் அரங்கு நன்றாக அமையும் என்று தெரிவித்து ஒப்புதல் அளித்தார்கள்.



அரங்கின் உள்ளே அமையும் ஆலயத்தின் கருவரையில் அமையவுள்ள இறைவன் முருகனாக இருக்கலாம் எனவும், ஆலயத்தைச் சுற்றி தங்கரதம் ஓடும்போது அது பொருத்தமாக அமையும் எனவும் தெரிவித்தார்கள்.

இந்து சமய அறநிலையத்துறை அரங்கத்தை எண்ணியவாறு உருவாக்க அக்டோபர் திங்கள் மூன்றாவது வாரத்திலிருந்து பணிகள் துவங்கப்பட்டு தீவிரமாக நடைபெற்று வந்தது. இடையே பெய்த மழையால் பணியில் சுணக்கம் ஏற்பட்டது, என்றாலும் தொய்வின்றி அரங்கம் மெல்லமெல்ல உருவாகி கண்கவர் அரங்கமாக உள்ளது என எண்ணற்ற சுற்றுலா பயணிகள் கூறும் வகையில் அரங்கம் அமைந்துள்ளது.



மூன்று நிலை இராஜகோபுரத்துடன் வடிவுடை, திருவுடை, கொடியிடை ஆகிய இறைவிகளுடன் தோற்றம் கொண்டுள்ளது அரங்கத்தின் முன் முகப்பு. அதன் முன்பாக வீரனார், அய்யனார் ஆகிய கிராமப்புறத் தெய்வங்கள் அலங்கரிக்க அரங்கத்தினுள் நுழைகின்றோம். அரங்கத்தில் நுழைந்ததும் அன்புடன் வரவேற்கிறது இந்து சமய அறநிலையத்துறை.

அரங்கத்தின் உள்ளே எங்கு நோக்கினும் அறிய காட்சிகள்.

மகளிரின் பெருமைகளை பறைசாற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ள "கண்ணகி, காரைக்கால் அம்மையார், செம்பியன்மாதேவியார், அவ்வையார், ஆண்டாள், திலகவதியார், மங்கையர்க்கரசியார்" ஆகியோரின் உருவங்கள் ஒருபுறம்.



"ஆண்டவன் முன் அனைவரும் சமம்" என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய, "நந்திதேவரை விளக்கி நந்தனாருக்கு இறைவன் காட்சி அருளியதும், திருப்பாணாழ்வாரை அர்ச்சகர் தோளில் சுமந்த காட்சியும்" மறுபுறம்.

இவை மட்டுமா!

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று செப்பியதோடு அணையா அடுப்பை ஏற்றி சன்மார்க்க நெறிக்கு வித்திட்ட வள்ளலாரின் காட்சி, சிவபெருமானுக்கு யானை பூஜை செய்திட்ட காட்சி, சிவபெருமான் மீது இலை தழை வலைபின்னிக்காத்த சிலந்தியின் காட்சி, சிதம்பரம் கோயிலில் தேவாரம் கண்டெடுத்த காட்சி, இராமானுஜர் "ஓம் நமோ நாராயணாய" என்ற மந்திரத்தை கூறிய காட்சி, கண்ணப்பிய நாயனார், கண்ணப்ப நாயனாராக ஆன காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.



அழகிய முறையில் அனைவரும் வியக்கும் வகையில் திருக்கோயில் தெப்பத்தைச் சுற்றிவரும் இயங்கும் தங்கரதம் மற்றும் திருத்தேரும், அரங்கின் இருமருங்கிலும் உள்ள சுவற்றில் 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஓவியக் காட்சிகளும், கண்கொள்ளாக் காட்சிகளாக அமைக்கப்பட்டுள்ளன.

அழகுற அமைக்கப்பட்டுள்ள இவ்வரங்கினை அனைவரும் கண்டு இன்புற வேண்டியது அவசியம்.



இந்த அரங்கம் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுரைகளோடும், அரசுச் செயலர் மற்றும் ஆணையர் ஆகியோரின் ஊக்கமளிப்போடும், ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறைச் செயலர், இயக்குனர் ஆகியோரின் சீரிய கண்காணிப்போடும் உருவாகியுள்ளது. அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி. அரங்கத்தை கண்டுகளித்து கருத்துக்களை நல்கிட அன்புடன் அழைக்கிறோம்.

இணை ஆணையர், சென்னை
தொடர்பு அலுவலர், இந்திய சுற்றுலா - தொழில் பொருட்காட்சி,
இந்து சமய அறநிலையத்துறை அரங்கம்.

# வல்லக்கோட்டை

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

இத்திருத்தலம் சுமார் 1200 ஆண்டுகளுக்கு முற்பட்ட மிகப்பழமையானது. இலஞ்சி என்னும் தேசத்தில் சலங்கொண்டபுரம் என்னும் நகரை பகீரதன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். இம்மன்னனை காண நாரதமகரிஷி ஒரு முறை வர அம்மன்னன் ஆணவத்தினால் மகரிஷியை அவமதித்தான். மிக்க கோபத்துடன் மகரிஷி வனத்திற்குச் சென்றார். திக்விஜயம்




செய்து வரும் அசுரன் கோரனை மகரிஷி கண்டு கர்வம் கொண்டுள்ள பகீரத மன்னனை வென்றால் உனது திக் விஜயம் பூர்த்தியாகும் என்று சொல்லி சென்றார். அவ்வசுரன் கோரன் பகீரத மன்னனை போரில் வென்றான். அனைத்தும் இழந்த பகீரத மன்னன் கானகம் சென்றான். அங்கு நாரத மகரிஷி வருவதைக் கண்டு வீழ்ந்து வணங்கி என்னை மன்னித்து நல்வழிகாட்டிடுங்கள் என்று வேண்டினான். நாரதமகரிஷி மனம் மகிழ்ந்து தூர்வாச முனிவரிடம் சென்று கேட்டால் வழி உண்டு என்றார். பகீரதனும் கானகத்தில் அல்லல்பட்டு கடைசியாக தூர்வாச முனிவரிடம் சென்று வணங்கி நடந்ததை கூறி மனம் வருந்தி நல்வழிகாட்டுங்கள் என்று முறையிட்டான். தூர்வாச முனிவரின் உபதேசப்படி வெள்ளிக்கிழமை விரதம் இருந்து பாதிரி மரத்தடியில் முருகப்பெருமானை வழிபட்டு அழியாப் பேறுபெற்றான். அம்மன்னன் அமைத்த ஆலயமே வல்லக்கோட்டை திருத்தலத்தில் உள்ள ஆலயமாகும். அவன் வழிபட்ட மூர்த்தியே வள்ளி தெய்வானை தேவியர்களுடன் கூடிய கோடையாண்டவர்.

### மூர்த்தி விசேஷம்

ஸ்ரீவள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ கோடையாண்டவர் என்னும் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி காண்போரை மயக்கும் குமிழ் சிரிப்புடன் கூடிய வதனமும் தன்னை நாடி வந்த அடியார்களுக்கு தீவினைகளை அகற்றி நல்வினை அளிக்க வல்ல அபயகரத்துடன் கூடிய நெடிதுயர்ந்து நின்ற திருக்கோலத்தில் அருள் பாலிக்கிறார்.

### திருக்குளத்தின் மகிமை

இந்திரன் தமது குலகுருவாகிய பிருகஸ்பதியிடம் முருகனை வழிபடுவதற்கு உத்தமமான தலம் எது என்று கேட்க, பிருகஸ்பதியும் பூலோகத்தில் இருக்கும் வல்லக்கோட்டை தலம் மிக மேலானது என்று சொன்னார். உடன் இந்திரன் இத்தலத்திற்கு வந்து தனது வஜ்ஜிராயுதத்தை ஊன்றி திருக்குளம் உண்டாக்கி இத்தீர்த்தத்தினால் முருகனுக்கு அபிஷேகம் செய்து பூஜித்து வணங்கி இஷ்டசித்தி பெற்றுச் சென்றான். வஜ்ஜிராயுதத்தால் உண்டாக்கினபடியால் வஜ்ரதீர்த்தம் என்ற பெயர் உண்டாயிற்று. இத்தலத்திற்கு செல்லும் மெய்யன்பர்கள் இத்தீர்த்தத்தில் மூழ்கி ஆறு எழுத்து மந்திரத்தை ஓதி ஓம் சரவணபவ என்று சொல்லி கோடையாண்டவரை தரிசித்தால் வினைகள் எல்லாம் நீங்கப் பெற்று பேரின்பம் பெறுவது உண்மை.



## திருத்தலத்தின் பெயர்

முன்னொரு காலத்தில் வல்லன் என்ற அசுரனின் கோட்டையாக இவ்வூர் இருந்தது. அவ்வரசன் தேவர்களுக்கு பல கொடுமைகளை செய்து வந்தான். தேவர்கள் முருகப் பெருமானிடம் சென்று வீழ்ந்து வணங்கி அசுரனின் கொடுமைகளை கூற, அசுரன் அழியும் நேரம் வந்து விட்டது அஞ்சற்க என்று அபயம் கொடுத்தார். அசுரனை வதஞ்செய்து பின்பு அவ்வசுரனின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வூர் வல்லன் கோட்டை என்று திகழும் என்றார். அதுவே காலப்போக்கில் வல்லக்கோட்டை என மருவியது. அருணகிரிநாத சுவாமிகள் இவ்வூர் முருகப்பெருமான் மீது பாடிய திருப்புகழ் பாடல்களின் ஏட்டிலும் கோடை நகர் என்ற பெயரும் வழங்கப்பட்டு வருகிறது.

## ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் கூறும் கோடை நகரம்

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் தலயாத்திரை செய்து வருகையில் திருப்போரூர் முருகனை வழிபட்டு இரவு தூங்கினார். காலையில் திருத்தணிகை செல்லலாம் என்று நினைத்து கொண்டு படுத்து உறங்கினார். கோடை நகர் குமரன் அவரது கனவில் தோன்றி வல்லக்கோட்டையினை மறந்தனையே என்று சொல்லி மறைந்தார். ஸ்ரீஅருணகிரிநாதரும் கண்விழித்து கனவில் கண்ட முருகனை நினைத்து அகமகிழ்ந்து திருத்தணிக்கு செல்லுகையில் வல்லக்கோட்டை ஸ்தலத்திற்கு வந்து முருகப்பெருமானுக்கு எட்டு திருப்புகழ் பாமாலை பாடி சூட்டினார்.

## திருக்கோயில் இருப்பிடம்

தருமமிகு சென்னை ஸ்ரீ கந்த கோட்டத்திற்கு 51 கிலோ மீட்டர் மேற்கிலும், காமகோடி பீடமாக இருக்கும் அன்னை ஸ்ரீ காமாக்ஷி உறையும் காஞ்சிபுரத்திற்கு 32 கி.மீ. கிழக்கிலும், ஸ்ரீ லக்ஷ்மிநரசிம்ம சுவாமி வீற்றிருக்கும் சிங்கப்பெருமாள் கோயிலுக்கு வடக்கிலும், ஸ்ரீமத் உடையவர் கோயில் கொண்டிருக்கும் திருப்பெரும்புதூருக்கு 10 கி.மீ. தெற்கிலும், இத்திருத்தலம் அமையப் பெற்றுள்ளது.

## கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை : 5.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

மாலை : 3.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை

ஞாயிறு, கிருத்திகை மற்றும் விசேஷ தினங்களில் முழு நேரமும் திறந்திருக்கும்

## கோயில் விசேஷ உற்சவங்கள்

ஸ்கந்த சஷ்டி, சூரசம்ஹாரம், மாசி குமார சஷ்டி, லக்ஷசார்ச்சனை, ஆடிக்கிருத்திகை, மாசி கிருத்திகை, ஆங்கில புத்தாண்டு, தமிழ் புத்தாண்டு, தைப்பூசம்

## வஜ்ஜிர தீர்த்தம்

விரத நாள் - வெள்ளிக்கிழமை 7 வாரம் வந்து வணங்கி வஜ்ஜிர தீர்த்தத்தில் தீர்த்தமாடி முருகனை வழிபட்டால் சகல செல்வங்களும் உண்டாகும்.

வந்தாரை வாழ வைக்கும் -
வல்லக்கோட்டை முருகன்



அகஸ்தியர் வழிபட்ட திருக்கோயில் - திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற தலம் - தியாகவல்லி என்ற அரசியின் பெயரால் அழைக்கப்படும் ஊர் - 150 ஆண்டுகளுக்கு முன் மணல் குன்றிலிருந்து வெளிப்பட்ட தேவாரத் திருக்கோயில் என பல்வேறு பெருமைகள் கொண்ட தலமாக விளங்குவது கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள தியாகவல்லி திருச்சோபுரம் திருக்கோயிலாகும்.


**அமைவிடம்**

இத்திருக்கோயில் கடலூர் மாவட்டத்தில் ஆலப்பாக்கம் இரயில் நிலையத்தை அடுத்து வங்க கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது. கடலூரில் இருந்து சிதம்பரம் செல்லும் நெடுஞ்சாலையில் 18 கி.மீ. தெற்கு நோக்கி பயணம் செய்தால் ஆலப்பாக்கம் என்ற இரயில் நிலையம் வரும். அதிலிருந்து இடது புறம் கிழக்கு நோக்கி பாலத்தினை கடந்து சென்றால் சுமார் 3 கி.மீ. தொலைவில் திருச்சோபுரம் அடையலாம். நடுநாட்டில் உள்ள 22 தலங்களில் ஆறாவது தலமாக இத்திருக்கோயில் விளங்குகிறது.

**மண்ணில் புதைந்த திருக்கோயில்**

வங்க கடற்கரை ஓரம் அமைந்துள்ள இவ்வூரில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. (தற்போதைய சுனாமி போன்றது) அதனால் அப்பகுதி மணல் மேடானது. கூடவே திருக்கோயிலும் மணலுக்குள் புதைந்து விட்டது. சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு "கோயில்மேடு" என்று அழைக்கப்பட்ட இப்பகுதி கடுமையான மழையின் காரணமாக மணல் மேடு மெல்ல மெல்ல கரைந்தது. இதன் முடிவில் சிறிய கோபுர கலசம் தென்பட்டது. அப்போது அங்கு வந்த மதுரை திருஞானசம்பந்த ஆதினத்து திருமட அடியார் ஸ்ரீமத் ராமலிங்க சிவயோகி தம்பிரான் இதனை கண்ணுற்றார். கோயில் புதைந்திருப்பதை அவர் உணர்ந்தார். எனவே, இம்மேட்டினை அகழும் பணியில் ஈடுபட்டார். இதன் பயனாய் வெளி உலகிற்கு பரவத் தொடங்கியது. தம்பிரான் மூலம் திருக்கோயில் வெளிபட்டதால் இத்தலத்திற்கு "தம்பிரான் கண்ட தலம்" என்ற பெயர் உண்டு.

# தம்பிரான் கண்ட தேவாரத்தலம்!



**தியாகவல்லியின் திருப்பணி**

குலோத்துங்க சோழனின் பட்டத்து அரசியான தியாகவல்லி என்பவள் இத்திருக்கோயிலுக்கு பல்வேறு திருப்பணிகளை செய்து வந்தாள். இவளின் திருப்பணியை போற்றும் வகையில் இவ்வூருக்கு தியாகவல்லி என்ற பெயர் நிலைத்தது. இவ்வரசியின் உருவம் கோயிலின் வடக்கு பிரகாரத்தில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**இறைவன் - இறைவி**

இறைவனின் திருப்பெயர் திருச்சோபுரநாதன். இவரே அகத்தியர் வழிபட்ட மூலவர். இறைவன் மேற்கு முகமாக எளிய வடிவில் காட்சி தருகிறார். இறைவியின் திருப்பெயர் திருச்சோபுர நாயகி. அன்னை தெற்கு முகமாக அழகிய தோற்றத்தில் அருள் வழங்கி வருகின்றாள். தலதீர்த்தம் - திருச்சோபுரம், தலவிருட்சம் கொன்றை.

**கல்வெட்டுகள்**

கி.பி. 1904ல் இந்திய தொல்லியல் துறையினர் மேற்கொண்ட ஆய்வில் ஐந்து முக்கியக் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. சோழன், பாண்டியன், தொண்டைமான் என பல்வேறு மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டது கல்வெட்டின் வாயிலாக தெரிய வருகிறது. இரண்டாம் ராஜராஜசோழன் (12ம் நூற்றாண்டு) மூன்றாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் (கி.பி. 1290ம் ஆண்டு) கோனேரி மேல்கொண்ட சுந்தர பாண்டிய தேவன் (கி.பி. 13ஆம் நூற்றாண்டு) தொண்டைமான் என பல்வேறு மன்னர்களின் கல்வெட்டுகள் இவ்வாலயத்தில் அமைந்துள்ளன. இக்கல்வெட்டுகளின் மூலம் மன்னர்கள் வழங்கிய நன்கொடைகளின் விவரம் தெரியவருகிறது. மேலும் செக்கிறை, தறியிறை, தட்டார்பாட்டம், காடுகாவல் என பல்வேறு வகையான வரிகள் குறித்த விவரங்களை அறிய முடிகிறது. ஆலய கருவறையைச் சுற்றி கல்வெட்டுக்கள் நிறைந்துள்ளன.

**தொண்டைமான் நன்கொடை**

தொண்டைமான் என்பவரால் தனது பெயரால் இக்கோயிலுக்கு நிலதானங்களை, சிவகால சந்திக்காகவும், திருக்கொடியேற்றும் திருக்காடு காளிக்கும் கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது. இத்தொண்டைமான் தான் முதல் குலோத்துங்கனது கலிங்க போருக்காக படைத்தலைமையை ஏற்றுச் சென்று வெற்றிபெற்ற கருணாகர தொண்டைமான் எனும் பல்லவக்குல மன்னனாவான். அந்த நிலப்பகுதிகள் இன்றும் "தொண்டைமான் நல்லூர்" என்ற பெயரால் சிற்றூராக அமைந்துள்ளது.

இக்கோவிலின் தென்மேற்கில் சுமார் 10 கி.மீ. தொலைவில் நடுநாட்டு ஐந்தாவது தேவாரத்தலமான தீர்த்தனகிரி அமைந்துள்ளது.

திருச்சோபுரம் கோயில் ராஜகோபுரம் இன்றி எளிமையாக காட்சி தருகின்றது.

கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள இயற்கை எழில் சூழ்ந்த திருக்சோபுரம் திருக்கோயில் அடியார்கள் அவசியம் தரிசிக்க வேண்டிய தலமாக திகழ்கின்றது.

படமும் படைப்பும் - **பனையபுரம் அதியமான்**

# பொங்கல் திருமகள்



நானிலம் போற்றும் நற்றமிழ்ச் செல்வரின்
நெஞ்சம் கவர்ந்திடும் 'தை'யவள்-கோடி
நன்மைகள் தந்திடும் 'கை'யவள்....!

தேனினும் இனிய சீர்மிகு பண்பினர்
சிந்தையில் உறைந்திடும் தூயவள் - சிறு
நிந்தையும் அறியாத் தாயவள்....!

கூன்நிகர் கருத்துகள் கொஞ்சமும் அற்றநம்
கனிதமிழ் மக்களின் உயிரவள் - நன்செய்
நனிசிறந் தோங்கிடும் பயிரவள்...!

மேன்மைகள் பெறவே அயரா துழைக்கும்
மேழியர் நலன்கள் காப்பவள் - குமரி
ஆழி யினும் மிக மூத்தவள்....!



கவிமாமணி டாக்டர் வேலூர்.
**ம. நாராயணன்** எம்.ஏ., பி.எச்.டி.,

செங்கதிர் உலகில் தோன்றிய பொழுதே
தமிழரின் வாழ்வொடு பிறந்தவள் - வான்
அமிழ்தென நிறைந்தே சிறந்தவள்....!

பொங்கல் திருமகள் பெருமைக் குரியவள்
பாவையர் மணங்களைக் கூட்டுவாள் - நம்
தேவைகள் அறிவாள் : ஊட்டுவாள்...

# சொல் நலன்



அருண்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

"பேசப்போனாயோ? சாகப்போனாயோ?" என்பது பழமொழி, பேசுவதுதான் எல்லாவற்றிலும் கடினமானது. மரணத்தை அதற்கு உவமையாகச் சொல்வதால், பேசுவதின் அருமை தெற்றெனத் தெரிகின்றதல்லவா?

உயிர்களை யெல்லாம் இருவகையாகப் பிரித்தார்கள். ஒன்று உயர்திணை: மற்றொன்று அஃறிணை. அஃறிணை என்றால் உயர்வு அல்லாத திணையென்று பொருள். உயர்வு தாழ்வு என்று கூறுதல் வேண்டும். தாழ்ந்தவர்களைத் தாழ்ந்தவர்கள் என்றால் அவர்கள் மனம் நோகும். ஆதலால் அல்லாத திணை என்றார்கள். "கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி.... மற்றவர் அறியா மாணிக்க மலை" என்றார். கல்லாதவர்களைக் கல்லாதவர் என்று பேசுதல் கூடாது.

அதுபோல் உயர்திணை, அஃறிணை என்று, உயிர்களை இரு பிரிவாக்கி இலக்கண நூல் கூறும்: உயர்திணை, அஃறிணை என்ற இரு பகுதியின் பாகுபாடு யாது? வாய் திறந்து பேசுகின்ற உயிர்கள் உயர்திணை: வாய் பேசாத உயிர்கள் அஃறிணை. எனவே உயர்வு, வாய்மலர்ந்து பேசுவதனாலேயே அமைகின்றது.

இனி அந்தப் பேச்சு எப்படி அமைய வேண்டும் என்பதைச் சிந்தித்து முடிவு கட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பேச்சுக்கு எட்டு அங்கங்கள் உண்டு: அஷ்டாங்க யோகம் என்றும், அஷ்ட புஷ்பம் என்றும் கூறுவதுபோல், பேச்சும் எட்டுவித உறுப்புக்களையுடையது.

பேச்சுக்கு உண்மை, நன்மை, அன்பு, நிதானம், இனிமை, ஆழம், சமயமறிதல், சபையறிதல் என்ற இந்த எட்டுத் தன்மைகள் அமைதல் வேண்டும்.

1. உண்மையே பேசுக.
2. நன்மையே பேசுக.
3. அன்பாகப் பேசுக.
4. இனிமையாகப் பேசுக.
5. ஆழமுடையதாகச் சிந்தித்துப் பேசுக.
6. சமயம் அறிந்து பேசுக.
8. சபையறிந்து பேசுக.

பேசுவதெல்லாம் பேச்சாகாது! பேச்சு ஒரு சிறந்த கலை.

**"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம்: நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்"**

என்ற திருவள்ளுவர் திருவாக்கால் அறிக,

சொற் செல்வம் என்றும் இதற்குப் பெயர். சொல்லின் செல்வராக விளங்கினார் அநுமந்தர். சொல்லுக்கு உள்ள ஆற்றல் வில்லுக்கும் கிடையாது. அதனால் தான் திருவள்ளுவர்.

**"வில்லே ருழவர் பகைகொளினும், கொள்ளற்க**
**சொல்லே ருழவர் பகை"**

காற்றிலும் கடிய வேகமுடையது சொல். அதனால் கம்பநாடர் "சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம்" என்கின்றார்.

நாம் கடிதங்கள் எழுதும்போது நலம் என்று எழுதுகின்றோம். அவ்விடம் நலங்களை எழுதுங்கள் என்றும் எழுதுகின்றோம். நலமறிய விரும்புகின்றோம். நலங்கள் பல: மனை நலம்,மக்கள் நலம், தன் நலம், மன நலம், இன நலம், பிணியிலா நலம், நில நலம், உணவு நலம் என இப்படிப் பல நலன்கள் உண்டு. அவற்றுள் தலையாய நலம் நா நலம்.

**"நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்**
**யாநலத் துள்ள தூஉ மன்று"**

என்பது பொய்யாமொழி.

எந்நலத்தினும் உயர்ந்தது சொன்னலம். இச் சொன்னலம் பன்னலமும் பயக்கும். சொல்லிலே இறைவன் உறைகின்றான். "இறைவன் எங்கே யிருக்கிறான்?" என்ற இரணியன் வினாவுக்குப் பிரகலாதர், "சொல்லினும் உளன்" என்று விடை பகர்ந்தார்.

சொல்லானது நலங்களின் கருவூலம் என உணர்க. இனி இந்தச் சொல்லின் உறுப்புக்கள் எட்டு என்று முன்னே கண்டோம் அல்லவா? அதனைப் பற்றி நினைவு செய்தல் வேண்டும். முதலாவதாக:-

(1) சொல் உண்மையுடன் கூடியதாக இருக்க வேண்டும். வேதம் தொடங்கும் போதே "சத்யம் வத" என்று கூறுகின்றது. சத்தியத்தைப் பேசு என்பது இதன் பொருள். சத்தியமே நித்திய. கடவுள் சத்திய வடிவினர். சத்திய உபாசனை புரிபவர் நித்திய வாழ்வு பெறுபவர்.

**"பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே**
**பொய்யிலா மெய்யர் அறிவில்**
**போதபரிபூரண அகண்டிதா காரமாய்ப்**
**போக்கு வரவற்ற பொருளே"**

என்கின்றார் தாயுமானவர்.

பயிருக்கு முள் வேலி, உயிருக்கு உண்மை வேலி, சத்தியத்தால் உயர்ந்தவன் அரிச்சந்திரன், சத்தியத்திற்காகத் தயரதர் தன் உயிரையே தியாகஞ் செய்துவிட்டார். காணாத முடியைக் கண்டேன் என்று பொய்யுரை புகன்ற பிரமதேவருக்கு ஆலயம் இல்லாத குறைவு ஏற்பட்டது. பொய்க் கரி புகன்ற தாழை சிவபூசைக்குப் பயன் பெறாதொழிந்தது. ஆகவே உண்மையே உரைக்க.

(2) நன்மையே பேசுக. உண்மை பேசினால் மட்டும் சிறப்பில்லை. உண்மையில் நன்மை கலந்திருக்க வேண்டும். நன்மை விரவாத உண்மை உயர்வு பெறாது.

ஒருவன் கோயிலில் ஜபம் புரிந்து கொண்டிருக்கின்றான். ஒரு பெண்மணி வழிபாட்டுக்கு வந்தாள். ஒரு குடியன் குண்டாந்தடி எடுத்துக் கொண்டு அவளைப் புடைக்கும் பொருட்டு வந்து, "ஐயா இங்கே வந்த பெண் எங்கே?" என்று வினவினான். இங்கே உண்மை பேசினால் அந்த மங்கை அடிபட்டுத் துன்புறுவாள். ஆதலால் இங்கே உண்மைக்கு உயர்வில்லை. நன்மையாகப் பேசுதல் வேண்டும். இம்சை விளைக்கும் உண்மை, நன்மையாகாது.

**"வாய்மை எனப்படுவ தியாதெனில் யாதொன்றும்**
**தீமை யிலாத சொலல்"**

(3) அன்புடன் பேசுக. அன்பு கலவாத இனிமையோ, கனிவோ இல்லாத பேச்சு நன்மையாகாது.

**"இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாஞ்**
**செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்"**

யாரிடமும் அன்பு கலந்து பேசுதல் வேண்டும். அன்புடைய பேச்சு செவியைக் குளிர்விக்கும், சிந்தையைக் குளிர்விக்கும். ஊன், உள்ளம், உணர்வு, உயிர் எல்லாவற்றையும் குளிர்விக்கும்.

மலருக்கு மணம் இன்றியமையாதது போல், வாழ்வுக்கு ஒழுக்கம் இன்றியமையாதது போல், பேச்சுக்கும் அன்பு இன்றியமையாதது. ஆகவே பகைவனிடத்தும் அன்பாகப் பேசுதல் வேண்டும். முதல்நாள் போரில் ஸ்ரீராமர் இராவணனிடம் பேசிய பேச்சு இன்றும் உன்னுந்தோறும் உள்ளத்தை உருக்குகின்றது அல்லவா!

**"ஆளையா உனக் கமைந்தன மாருதல் அறைந்த**
**பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு**
**நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்**
**வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்."**

(4) நிதானமாகப் பேச வேண்டும். வெடு வெடு என்றும், வேகமாகவும் விமான வேகத்திலும் பேசுதல் கூடாது. பேச்சில் அமைதி இருக்க வேண்டும். உணவு உண்ணும்போது அவசரம் அவசரமாக விழுங்கக் கூடாது, இறைவனுக்கு மலர் வேகமாக அர்ச்சிக்கக் கூடாது. அது போல் மெல்ல நிதானமாகப் பேசிக் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய், கேளாரும் வேட்ப மொழிதல் வேண்டும். இப்படிப் பேசும் பெருமையுடையவர் தருமர் என உணர்க.

இதனை நாவடக்கம் என்பார் திருவள்ளுவர்.

**"எல்லாம் உணர்ந்தும் வியாதன் இயம்பியஅச்**
**சொல்லாலே நாவயர்ந்தான் சோமேசா - வல்லமையால்"**

சோமேசர் முதுமொழி வெண்பா -

**யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்கப் பட்டு.**

அடக்கமின்றிப் பேசிக் கெட்டவர் பலர். யாராலே கெட்டான் என்றால் நோராலே கெட்டான் என்று தெலுங்கிலே ஒரு பழமொழி.

இராசசூயம் என்ற வேள்வி முற்றியபின் துரியோதனன் தனது துணைவர்களுடன் தருமருடைய அழகிய சபா மண்டபத்துக்கு வந்தான். குளமில்லாத இடத்தைக் குளம் என்றும், குளமுள்ள இடத்தைக் குளமில்லாத இடமென்றும் கருதி, ஆடையைத் தூக்கியும் குளத்தில் வீழ்ந்தும் இடர்ப்பட்டான். அப்போது திரௌபதி தந்தைக்குத் தான் விழியில்லையே? இவனுக்கும் விழியில்லையோ? என்று அவையில் நாவடக்கமின்றி சொன்னாள். அதன் விளைவுதான் பாரதத்தில் திரௌபதியும் பாண்டவரும் இடர்ப்பட்டது. ஆகவே சொல்லை அளந்து பேச வேண்டும். பிறர் மனம் நோகுமாறு படபடப்பாகப் பேசுதல் ஒருபோதும் கூடாது.

(5) இனிமையாகப் பேசுக. பேச்சுக்கு உயிர்நாடி இனிமை. இனியவை கூறல் என்ற ஒரு அதிகாரமே வகுத்தார் திருவள்ளுவர். பணிவும் இன்சொல்லுமே ஒருவனுக்குச் சிறந்த ஆபரணம். இவையன்றி வேறு அணிகலன்கள் இல்லை என்றார்.

**"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**
**அணி: அல்ல மற்றுப் பிற**

பாண்டவர்கள் மகாப் பிரஸ்தானம் என்ற ஒரு விரதத்தை மேற்கொண்டு சொர்க்கம் போகின்ற போது பீமன் கீழே விழுந்து மாண்டுவிட்டான். ஏன் அவன் விழுந்தான்? என்று ஜனமேஜயன் கேட்டான். இன்சொல் இல்லாத ஒரே குற்றத்தினால் பீமன் விழுந்து விட்டான் என்றார் வைசவம்பாயனர்.

உலகத்தை எல்லாம் வசப்படுத்தும் உபாயம் இன்சொல் என்று கண்ணபிரான் கூறுகின்றார்.

(6) ஆழமுடையதாகச் சிந்தித்துப் பேசுக. பேச்சில் ஆழம் இருக்க வேண்டும். அது சிந்தித்துப் பேசும் பேச்சில் சித்திக்கும். சகுந்தலை தன் மகனுடன் துஷயந்தனுடைய அரசவைக்குச் சென்றாள். துஷயந்தன், "பெண்ணே நீ யார்? உன் கணவன் யார்? இம் மைந்தன் யாவன்? இங்கு ஏன் வந்தாய்?" என்றெல்லாம் வினவினான். இத்தனை வினாக்களுக்கும் ஆழமாகவும் அழகாகவும் சிந்தித்தும் சகுந்தலை சொன்ன விடை :

"மகனே பரதா! உன் தந்தையை வணங்கு" என்றாள். மன்னவன் வினவிய வினாக்கள் அத்தனைக்கும் இதில் விடையிருப்பதை ஆழ்ந்து சிந்திக்க.

(7) சமயமறிந்து பேசுக, சமய சந்தர்ப்பம் அறிந்து பேசுவது நமக்கு மிகுந்த நன்மைகளைக் கொடுக்கும், ஒருவன் மகிழ்ச்சியாக இருக்கும் போதும், நமது தயவை நாடும்போதும் பேசிப் பயன் பெற வேண்டும். ஒரு புலவர் அம்பிகையிடம் கூறுகின்றார் :

"தேவி! நான் பாவி. அநேக பாவங்கள் செய்துவிட்டேன். அப்பா என்மீது கோபிப்பார். நீ நல்ல தருணம் பார்த்துக் கூறி, என் குறைகளை மன்னிக்குமாறு செய்" என்று பாடுகின்றார்.

**ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதுன் அருகிருந்து**
**நீமுத்தந்தாவென் றவர்கொஞ்சும் வேளையில் நித்தநித்தம்**
**வேய்முத்தரோடென் குறைகளெல்லாம் மெல்லமெல்லச் சொன்னால்**
**வாய்முத்தம் சிந்திவிடுமோ நெல்வேலி வடிவன்னையே**

தலைவனிடம் சமயமறிந்து குறைகளைக் கூறிப் பணியாளர் நலம்பெற வேண்டும். மனைவி கணவனாரிடம் நேரம் அறிந்து கூறி குறை நீக்கி நிறைவு பெற வேண்டும். குழம்பு-ரசம் பக்குவத்தில் தாளிதம் புரிவதுபோல்,நேரம் அறிந்து பேசுவோர் சாரம் பெறுவர்.

(8) அவையறிந்து பேசுக. கூடியுள்ள சபையில் இருக்கும் மக்களின் மன நிலையினை அறிந்து, அதற்கேற்பப் பேசுதல் வேண்டும்.

**"அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்**
**தொகையறிந்த தூய்மை யவர்"**


என்பார் திருவள்ளுவர்.

அவையறிந்து கூறுந் திறம் விரிவுரையாளர்கட்கு மிகமிக இன்றியமையாதது. எவை யறிந்தாலும் அவையறிதல் வேண்டும். அவையறியாது பேசும் பேச்சு நோயறியாது கொடுக்கும் மருந்து போல் தீமை பயக்கும். ஆதலால் அவையறிந்து பயனுடைய சொற்களால் விளக்கமாகவும் சுருக்கமாகவும் உருக்கமாகவும் பேச வேண்டும்.

எனவே, உண்மையாகவும், நன்மையாகவும், அன்பாகவும், நிதானமாகவும், இனிமையாகவும், ஆழமாகவும், சமயமறிந்தும், சபையறிந்தும் பேசுக. முடிவில் பேசாமல் இருந்தும் பழக வேண்டும்.

**"ஆசா நிகளம் துகள் ஆயினபின்**
**பேசா அநுபூதி பிறந்ததுவே".**

- கந்தர்அநுபூதி



முன்னொரு காலத்தில் மதுரையை குலபூஷண பாண்டியன் என்பவன் ஆண்டு வந்தான். அவன் மதுரை சோம சுந்தரப் பெருமான் மீது அளவற்ற பக்தி கொண்டிருந்தான்.

அதே வேளையில் காஞ்சீபுரத்தைக் காடு வெட்டிச் சோழன் என்பவன் ஆண்டு வந்தான். அவனும் மதுரை சோமசுந்தரப் பெருமான் மீது எல்லையற்ற பக்தி கொண்டிருந்தான். அரசியல் காரணங்களால் அவனால் மதுரைக்குச் சென்று ஆலயத்தை வலம் வந்து பெருமானை வழிபட முடியவில்லை. அதனால் மிகவும் வருந்தினான்.

சிவபெருமான் அவனுடைய அன்புக்கு இரங்கி, கனவில் சித்தராகத் தோன்றி, சோழனே, நீ தனியாகப் புறப்பட்டு மதுரைக்கு வந்து வடக்கு வாசலில் காத்திருப்பாய் என்றார். அதன்படி அவன் விரைந்து வந்து காத்திருந்தான். இரவாகிவிட்டது, காவலர்கள் கோயிலை மூடி பூட்டி துணியால் சுற்றி பாண்டி நாட்டு முத்திரையான கயல் முத்திரை வைத்து விட்டுச் சென்றனர். சிவபெருமான் சித்தர்வடிவில் சோழன் முன்னே தோன்றினார். கட்டுக் காவல்களைத் தாண்டி அவனை ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றார். அவன் இந்திர விமானத்தில் பெருமானைக் கண்டு மகிழ்ந்தான். பலவாறு தொழுது பரவசம் அடைந்தான். அவன் ஆலயத்தைவிட்டு வெளியே வந்ததும், சித்தராக வந்த சிவபெருமான் ஆலயக் கதவை மூடி தனது முத்திரையான இடப முத்திரையைப் பதித்தார். பின்பு அவனுடன் மதுரைக்கு வெளியே வந்து அவனுக்கு விடையளித்தார்.

மறுநாள் காலையில் கோயிலைத் திறக்க வந்தவர்கள் வடக்கு வாயிலின் கதவின் மேல் இடப முத்திரை இருக்கக் கண்டனர். அதைப் பாண்டியனுக்குத் தெரிவித்தனர். அவன் எதும் புரியாது திகைத்தான்.

அன்றிரவு பெருமான் அவன் கனவில் தோன்றி மன்னனே! எனது அன்பன் காடுவெட்டிச் சோழனை அழைத்து வந்து ஆலயத்தைக் காண்பித்தேன். செல்லும்போது எனது முத்திரைகளைக் கதவில் பொறித்து வைத்தேன் என்று கூறி மறைந்தார். பாண்டியன் சோழனின் பக்தியையும் இறைவனின் எளிவந்த

# இறைவன் வைத்த தண்ணீர்ப் பந்தல்

கருணையையும் எண்ணி வியந்தான்.

காலங்கள் சென்றன. குலபூஷண பாண்டியன் தன் மகன் இராஜேந்திர பாண்டியனுக்கு முடி சூட்டி விட்டு இறைவன் அடி சேர்ந்தான்.

காடுவெட்டிச் சோழனுக்கு மதுரைக்குச் சென்று வந்த காட்சி மீண்டும் மீண்டும் நினைவில் நிழலாடியது. அவன் பாண்டியனுக்கு நண்பனாகி அதன் மூலம் மதுரைக்கு வந்து சோமசுந்தரப் பெருமானை வழிபட விரும்பினான்.

பண்டியனுக்குப் பரிசுகள் பலவற்றை அனுப்பி அவனது நட்பை வேண்டினான். சோழனின் பக்தியைப் பற்றி தன் தகப்பன் மூலம் முன்னமே அறிந்திருந்ததால் பாண்டியன் அவன் நட்பை ஏற்றுக் கொண்டான். அந்த நட்புரிமையால் சோழன் மதுரைக்கு வந்து சோமசுந்தரரை அடிக்கடி தரிசித்து மகிழ்ந்தான்.

பாண்டியனின் நல்ல பண்புகளைக் கண்ட சோழன் தன் மகளை அவனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினான். அதற்கான உறுதியைச் செய்தான்.

பாண்டியனுக்கு ஒரு தம்பி இருந்தான். அரசுசிம்மன் என்ற அவன் பழியஞ்சாப் பாதகன். சோழன் தன் மகளைப் பாண்டியனுக்குத் தர விரும்புவதை அறிந்து சூழ்ச்சி செய்து அந்தப் பெண்ணைத் தான் திருமணம் செய்து கொண்டான்.

சில நாட்கள் சென்றன. அவன் சோழனிடம் மாமனே! நீங்கள் உதவி செய்தால் நான் பாண்டியனை வென்று மதுரையின் மன்னனாவேன் நீங்கள் சோமசுந்தரரைத் தடையின்றித் தரிசிக்கலாம் என்றான். அவன் விரும்பியவாறு சோழன் அவனுக்குப் பெரும்படையை அளித்தான்.

அவர்கள் படைகளைத் திரட்டிக் கொண்டு மதுரை எல்லைக்கு வந்து விட்டனர். அதை அறிந்த பாண்டியன் கலங்கினான். சோமசுந்தரப் பெருமானிடம் சென்று முறையிட்டான். பெருமான் 'பாண்டியனே கலங்காதே நாளைக்குப் போருக்கு புறப்படு வெற்றி உனதே' என்றார். மன்னன் மகிழ்ந்து போருக்கான ஏற்பாடுகளைச் செய்தான்.

மறுநாள் உதயவேளையில் பாண்டியனின் சேனை சோழனின் சேனைகளை எதிர்கொண்டது. பெரும் போர் மூண்டது. யானைகளின் பிளிறல்களும், குதிரைகளின் கனைப்பும், போர் வீரர்களின் ஆரவாரமும் அச்சத்தை ஊட்டுவதாக இருந்தன.

வேனிற்காலமானதால் சூரியன் சுட்டெரித்தான். எனவே, சற்று நேரத்தில் எல்லோரும் களைத்து விட்டனர் அனைவரும் தாகத்தால் தவித்தனர். போர்வெறி குறைந்தது, அவர்கள் வலிமை குறைந்தது.

அவ்வேளையில் சிவபெருமான் தவம் நிறைந்த முனிவனைப் போல் உருத்தாங்கினார். பாண்டியனின் படைகளுக்கு நடுவே தண்ணீர்ப்பந்தலை உண்டாக்கினார். தாகத்தால் தவித்தவர்களுக்கு வேண்டிய அளவு குளிர்ந்த நீரைத் தந்தார். அதைக் குடித்த பாண்டியனின் படையினர் அமுதம் குடித்தது போல் புத்துணர்ச்சி பெற்று வேகத்துடன் பாய்ந்தனர்.

சோர்ந்து களைத்திருந்த சோழவீரர்களை பாண்டியன் படையினர் எளிதில் சுற்றி வளைத்துப் பிடித்தனர். சோழ மன்னனை அரசன் முன்பு கொண்டு சென்று நிறுத்தினர். அவன் சிவபெருமானே உமது திருவுள்ளம் யாது என்று சிந்தித்தான் பெருமான் அசரீரியாக, இவர்கள் தீ நெறிச் சென்றவர்கள் உனது மனதிற்கேற்றபடி தண்டித்துக் கொள் என்றார்.

பண்பிலும் அன்பிலும் சிறந்த பாண்டியன் சோழனை மன்னித்து அவனது நாட்டிற்குத் திரும்பி அனுப்பினான். சகோதரனுக்குப் பெரிய தண்டனை தராமல் அவனுடைய உரிமைகள் சிலவற்றை மட்டும் பறித்து விட்டான். நெடுங்காலம் சைவம் சிறக்க சிறப்புடன் நாடாண்டு வந்தான்.

சிவபெருமான் பாண்டியர் படைக்கு நடுவே தண்ணீர்ப் பந்தல் வைத்தது, திருவிளையாடற் புராணத்துள் தண்ணீர்ப்பந்தல் வைத்த படலத்துள் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மாணிக்கவாசகர் இதனை

**'தண்ணீர்ப்பந்தல் சயம் பெற வைத்தும்'**

என்று திருவாசகத்துள் கீர்த்தித் திருவகவலில் குறித்துள்ளார்.

**- பூசை ச. ஆட்சிலிங்கம்**

# உலகமே சொந்தம்



வாழ்க்கையில் அமைதி வேண்டுமென்றால் மற்றவர்களின் குறைகளைப் பார்க்காதே. அதற்குப் பதிலாக உன்னிடம் இருக்கும் குற்றங்களையே பார். இந்த உலகம் முழுவதையுமே உன்னுடைய சொந்தமாக்கிக் கொள்ளக் கற்றுக் கொள். இந்த உலகில் யாரும் அன்னியர் இல்லை. இந்த உலகம் முழுமையும் உன் சொந்தமே.

**- அன்னை சாரதாதேவி**

# மூர்த்தி நாயனார் கீர்த்தி



ஓம் நமசிவாய.... இந்த ஐந்தெழுத்து அனைத்தையும் அளிக்க வல்லது. புகழ், செல்வம், பதவி உயர்வு. இவற்றை வேண்டாம் என்று யாரும் சொல்வது இல்லை. இவற்றின் பின்னே அனைவரும் ஓடுகின்றனர். இவற்றை ஒரு சேரத் தரவல்ல... ஒப்பற்ற புராணம்... பெரிய புராணம். முழுமையாக யாரால் படிக்க முடியும்? ஏது நேரம்? பொறுமை உண்டா? படித்தால் புரியுமா? வினாக்கள் உங்களைச் சூழலாம்.

வினாக்களை ஒரு புறம் ஒதுக்குங்கள். மூர்த்தி நாயனார் தம் கீர்த்தியை நாம் இங்கு சிந்திக்க இருக்கிறோம். சேர்ந்து சிந்திப்போம்.

மூன்று உலகங்களிலும் மேலானது. உண்மைப் பொருள் கூறும் தமிழ் நூல்களும்: செம்மைப் பொருளைத் தரும் இறைவனும் உடைய திரு ஆலவாயில்...

கூடல்... மதுராபுரி... மதுரை.... எனப் பலரும் பலவாய்ப் போற்றும்... சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த உயர்ந்த நகரில் வணிகர் குலத்தில் தோன்றியவர் மூர்த்தியார்.

**"எப்பற்றினையும் அறுத்து ஏறுகைத்தேறு**
**வார்தாள்**
**மெய்பற்றெனப் பற்றி விடாத விருப்பின்**
**மிக்கார்"**

எனச் சேக்கிழார் பெருமான் போற்றும் வண்ணம் அனைத்து பற்றுகளையும் துறந்து ஆண்டவனின் திருவடியில் முழுமனதையும் நிலைநிறுத்தி... அதனை விட்டு விடாமல், விருப்பத்தின் காரணமாகப் பற்றிக்கொண்டு வாழ்ந்தார். அவருடைய உள்ளத்தில் இறைவன் மீது தணியாத அன்பு பெருகி நின்றதைச் சேக்கிழார் **"மூளும் பெருகு அன்பு எனும் மூர்த்தியார் மூர்த்தியார் தாம்"** எனக் கூறுவதின் காரணமாக... அவருடைய உடல் முழுவதும் சிவன் மயமாக... அன்பால் நிறைந்திருந்ததை அறிய முடிகிறது.

இறைவனுக்கு அணி செய்யும் சந்தனத்தை, தினமும் அளித்தல் எனும் திருப்பணியைச் செய்து வருகிறார். சமண சமயத்தைப் பின்பற்றும் கருநாடர் தம் தலைவன் செய்த சூழ்ச்சியால் சந்தனம்... தர இயலவில்லை.

இறைவனுக்கு தருவதற்கு சந்தனம் தட்டுப்பாடு ஆனது. ஆயினும்... தேய்க்கும் என் கைக்கும் ஏது தட்டுப்பாடு எனக் கருதி.. தன் கரத்தை சந்தனக் கல்லில் தேய்க்கலானார். அப்போது இறைவன் ஒலி வழி பேசுகிறான். "உன் அன்பால் இப்படிச் செய்ய வேண்டாம். தீமை செய்வோர், மாள்வர். இந்த நாடு முழுமையும் நீயே ஆண்டு... எம் உலகு வந்தடைவாய்" - என வான் வழி ஒலிக்கும் குரல் கேட்டு மூர்த்தியார் உவகை கொள்கிறார்.

கையில் ஏற்பட்ட ஊனம் மறைகிறது

ஒலியில் எழுந்தபடி... நாட்டில் தீயோர் மாள... அரசு செலுத்த அரசன் வேண்டி... பட்டத்து யானை புறப்படுகிறது.

திருக்கோயிலின் வாசலில் நிற்கிறார் மூர்த்தியார்.

சிவன் கோயில் அருகில் வசிப்பவர்கள் அனைவரும் தவமியற்றியவர்களே... என்றொரு உட்சிந்தனையும் இப்பாடலில் இருப்பதைக் காணலாம்.

**"வேழத் தரசங்கண் விரைந்து நடந்து சென்று**
**வாழ்வுற்று உலகம் செய் தவத்தினின்**
**வல்லாரைச்**
**சூழ்பொற் சுடர்மணி மாநிலம் தோய முன்பு**
**தாழ்வுற்றெடுத்துப் பிடர் மீது தரித்தது**
**அன்றே"** பெ.பு 1001

இறைவனின் மீது நம்பிக்கை வைத்து மனதில் ஐந்தெழுத்தையும்... செயல்களில் இறைப்பற்றையும்... தெற்றென வெளிக்காட்டிய மூர்த்தியாருக்குப் பட்டத்து யானை மூலம் அரசனாகும் வாய்ப்பினை வழங்கிய வள்ளல்... மூர்த்தியாரைப் பற்றிச் சிந்திக்கும் நமக்கும்... புகழை, செல்வத்தை, உயர்ந்த பதவிகளை... வழங்குவார் என உறுதியாக நம்புவோம்.

கீர்த்தி கொள் மூர்த்தியாரின்
தவத்தைப் போற்றுவோம்
கீர்த்திகள் நம்மையும் வந்தடைய
உள்ளத்தில் ஐந்தெழுத்தை உச்சரித்து
உயர்வோம்.

**ஆரூர் எஸ். சுந்தரராமன்**

# வேலும் மயிலும் துணை

## கந்தர் அநுபூதி



"அடியைக் குறியாது" என்று அடுத்த பாடல் தொடங்குகிறது. எதைக் குறிக்க வேண்டுமோ அதைக் குறிக்காமல் இருப்பது அறியாமை. ஒரு கதை சொல்கிறேன். துரோணாச்சாரியார் எப்போதும் அர்ச்சுனனையே பாராட்டிக் கொண்டு இருந்தார். துரியோதனன் ஒருநாள், "எப்போதும் அர்ச்சுனனையே பாராட்டுகிறீரே ஏன்?" என்று கேட்டான். துரோணர் எல்லோரையும் ஒரு மாந்தோப்புக்கு அழைத்துச் சென்றார். மாந்தோப்பில் ஒரு உயர்ந்த மாமரம். அதன் உச்சியில் ஒரு மாம்பழம் இருந்தது.

துரியோதனனைப் பார்த்து அந்த மாம்பழத்தைக் கேட்டார். அம்பாலே அந்த பழத்தைப் பறித்துக் கொடு என்று துரோணர் கேட்டார். "பழம் தெரிகிறதா?" தெரிகிறது, "மரம் தெரிகிறதா?" தெரிகிறது, "என்னைத் தெரிகிறதா?" தெரிகிறது, "எல்லாம் தெரிகிறது" என்றான். அம்பு விட்டான் ஆனால் பழம் விழவில்லை. பின்னர் அர்ச்சுனனை அழைத்தார், அவனிடம் கேட்டார் "மரம் தெரிகிறதா?" இல்லை,"கிளை தெரிகிறதா?" இல்லை, "என்னைத் தெரிகிறதா", பழக்காம்பு தான் தெரிகிறது! "அம்பை விடு" என்றார். அர்ச்சுனன் அம்பை விட்டான். பழம் கீழே விழுந்தது. துண்டில் பிடித்துக் கொண்டு வந்து குருவிடம் கொடுத்தான். அதற்கு முன் துரியோதனன் நினைத்தான் மரம் தெரியவில்லை, கிளை தெரியவில்லை என்றான், அப்போது எப்படி பழம் விழும் என்று நினைத்தான் ஆனால் பழம் விழுந்து விட்டது.

அப்போது அர்ச்சுனனிடம் "எப்படிப் பழம் விழுந்தது?" என்றான். அதற்கு அர்ச்சுனன் "நான் பழத்தைப் பார்க்கவில்லை, கிளையைப் பார்க்கவில்லை, மரத்தைப் பார்க்கவில்லை, ஆனால் பழத்தின் காம்பை மட்டும்தான் பார்த்து அம்பை எய்தேன். அதனால்தான் பழம் விழுந்தது" என்றான். எது லட்சியமோ அதைத்தான் பார்க்க வேண்டும். அதுபோல நம்முடைய வாழ்க்கையின் லட்சியம் என்ன, முருகப் பெருமானுடைய திருவடியே லட்சியம் ஆகவே நாம் எதைப் பார்க்க வேண்டும்? முருகப் பெருமானுடைய திருவடியையே குறியாகக் கொண்டு வாழ வேண்டும். "குறியைக் குறியாது அறியாமையினால் முடியக் கெடவோ - முறையோ - முறையோ!.

தனிமையில் இருக்கும் சிவபெருமானைக் கிண்டல் பண்ண வேண்டும் என்று சுந்தரமூர்த்திக்கு ஆசை வந்துவிட்டது. அவருக்கு திருவாரூர் மற்றும் திருவொற்றியூர் தான் மிகவும் பிடித்த இடம். ஆரூரில் பரவையும், ஒற்றியூர் சங்கிலியும் இருந்தனர். ஒரு ஊர் ஒற்றியூர், இன்னொரு ஊர் ஆரூர். இது யார் ஊர் என்று கேட்கிறார்கள். அந்த ஊரினை ஒத்திவைத்து விட்டு அறியாமையால் இந்த ஆரூரில் வந்து குடியிருக்கிறாயோ என்று கேட்டார். இது அறியாமையா? அறியாமை இறைவனுக்கா, நமக்கா? எதைக் குறிக்க வேண்டுமென்ற அறிவிலாதவர் உலகில் இருக்கின்றனரே! சுந்தரர் தோழராக இறைவனிடம் விளையாடுகிறார். அவ்வளவுதான்!.

அருணகிரி "அடியைக் குறியாது அறியாமையினாலே முடியக் கெடவோ?" எனத் தேம்புகிறார். இன்பம் என்ற ஒன்று கிடைக்கும் என்ற ஆசையிலேயேதான் துன்பப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். துன்பம் தான் மிகுதி, துன்பத்திலே இன்பக் கலப்பு கிடையாது. ஆனால் இன்பத்தில் துன்பக் கலப்பு உண்டு. இது மாதிரி இன்பம் இனி கிடைக்குமா என்று நினைத்தாலே

---

டாக்டர் **சரசுவதி இராமநாதன்**

அது துன்பம். இது நிறைவேறாத லட்சியம். 'முடியக் கெடுதல்' - இந்தப் பிறவிக்கு பிறகு இனிமேல் அடுத்த பிறவி கிடையாது என்று வாழ்தல், ஆண்டவன் திருவடியை அடைதல்தான் வாழ்தல்! மற்றது வெறும் பிழைப்பு. வாழாமல் வாழும் வாழ்க்கை, "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே!" என்பது அருளாளர் வாக்கு. மேலும் மேலும் பிறப்பெடுத்துக் கெடுவதற்கோ என்று கேட்கிறார் அருணகிரிநாதர். வேல் ஆயுதத்தைக் கையில் கொண்ட வேலா, குணமலையே! என்று கூறுகிறார் மலை என்று ஏன் சொல்கிறார். மலை உயர்ந்தது ஆண்டவன் எல்லாவற்றையும் விட உயர்ந்தவன். மலை எல்லாவற்றிற்கும் வளம் தருவது. மலைக்குள்ள தனிச்சிறப்பு அசையாமல் இருப்பது, எப்போதும் இருப்பது, சலிக்காமல் இருப்பது குணபூதரனே என்றால் குணக்குன்றே என்று பொருள்.

இனி, பாடலைக் காண்போம்.

**"அடியைக் குறியா தறியாமை யினால்**
**முடியக் கெடவோ முறையோ முறையோ!**
**வடிவிக் ரமவேல் மகிபா குறமின்**
**கொடியைப் புணரும் குணபூ தரனே!"** 23

இராவணன் பக்கம் அதர்மம் இருந்தது. இராமன் பக்கம் தர்மம் இருந்தது. அதர்மத்தை தர்மம் ஜெயித்தது. கம்ப ராமாயணத்தில் முதல் பாட்டு இதைச் சொல்லியது. கோசல நாட்டில் ஓடும் நதி சரயு நதி. அந்த சரயு நதி ஓடக்கூடிய கோசல நாட்டில் உள்ள ஆண்களின் ஐம்பொறிகள் தப்பான வழிக்குப் போகாதவை.பெண்கள் கண்கள் தப்பான பார்வை பார்க்காது. அப்படிப்பட்ட கோசல நாட்டின் சிறப்பைச் சொல்வேன் என்று கம்பர் சொல்கிறார். பெண்ணின் விழி திசை திரும்புமானால் ஆடவனின் ஐம்பொறியும் தடுமாறும். பெண்ணின் கண் தடுமாறினால் ஆணின் ஐம்புலனும் தடுமாறும்.

"கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே சேர்வேன்" என்று அருணகிரிநாதர் குறிப்பிட்டார். ஆண்களில் பெரும்பாலோர் நல்லவர்களாக இருப்பதற்குக் காரணம் கெட்டுப் போவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. கெட்டுப் போக வாய்ப்புக் கிடைத்து, அதிலும் கெட்டுப் போகாமல் இருப்பவன் தான் சிறந்தவன். "நான் மங்கையர் கொங்கையிலே சேர்ந்தவன். உன் அருள்சேர எண்ணுகிறேனே, நடக்குமா? பெரிய வேலாயுதத்தை கையில் கொண்டவனே சூரபத்மாவை வேரோடு அழித்தவனே! அருள்செய்வாயா?" என்று ஏக்கம் இப்பாடல் ஆகிறது.

**"கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே**
**சேர்வேன் அருள்சேர வும்எண் ணுவதோ?**
**சூர்வே ரொடுகுன் றுதொளைத் தநெடும்**
**போர்வேல் புரந்தர பூ பதியே!"** -24

அடுத்த பாடல் :

"செய்யோய்! அதாவது மேனி சிவந்தவனே! சூரனைக் கொன்றதால் உன் வேலாயுதமும் சிவப்புத்தான்! "முழுதும் செய்யோய்! நான் நானாகவும் நீங்கள் நீங்களாக இருப்பதற்கும் என்ன காரணம் சொல்ல முடியும். அதுதான் விதி. நாம் செய்த வினைகள் எல்லாம் ஒரே ஜன்மத்தில் பலன் கொடுத்தால் நமக்கு அந்த ஜன்மம் காணாது. அதனால் தான் அநேகப் பிறப்புகள் ஏற்படுகிறது. எல்லா உயிர்களுக்கும் பிறப்பு வித்தியாசமானது. 10 மாதம், 12 மாதம், 9 மாதம் என்று உள்ளது மாற்றம்தானே!

பிறப்பு எல்லோருக்கும் உளது. எல்லாப் பிறப்பும் விதியால்தான் வருகிறது. திருவள்ளுவர் விதியை நம்பியவர். முற்பிறப்பில் அவரவர் செய்த வினையின் பலனைத்தான் அனுபவித்துக் கொண்டு இருக்கின்றோம். ஞானியாகியவன் "எல்லாம் ஆண்டவன் செயல்" என்று உணருகின்ற காரணத்தால் 'நான் செய்கிறேன்' என்று நினைக்காததால் அவனுக்குப் புதுவினை கிடையாது. அவனுடைய வினையை இப்பிறப்பில் அனுபவித்துத் தீர்த்துக் கொள்கிறான். தான் வேறு தன்னுடைய உடல் வேறு என்று நினைக்கிறவர் ஞானி. தானியத்தை வறுத்தால் பின் முளைக்காது அதேபோல் ஞானிகளின் வாழ்வு முடிந்து விட்டால் பிறவாமை எனும் மோட்சம் கிடைக்கிறது. பிறகு பிறப்பது இல்லை. அப்படி பிறவாநெறி பெற அருள்காட்டு.

**"மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகத்**
**தையோ அடியேன் அலையத் தகுமோ!**
**கையோ அயிலோ கழலோ முழுதும்**
**செய்யோய் மயிலே றியசே வகனே!"** 25

முருகா எனக்கு உன் காட்சியைக் காட்டு உன்னைப் பார்த்த பின் எனக்கு இந்த உடம்பிலிருந்து நிரந்தர விடுதலை கிடைக்கும். வேதம், ஆகமம், ஞானம் எல்லாம் நீதான்! பார்த்து பழக்கப்பட்டு அனுபவித்த பொருளைத் தான் மனதால் நினைக்க முடியுமே தவிர பார்க்காத

ஒன்றையோ அனுபவிக்காத ஒன்றையோ நினைக்க முடியாது. முழுக்கத் தெரியாததை நினைக்க முடியாது. சொல்ல முடியாது. முருகா நீ மனத்திற்கு அப்பாற்பட்டவன். உன்னை நான் மனத்திற்குள் பிடிக்க முடியாது. "வேதாகம ஞான வினோத! தேவலோகத்திற்குத் தலைவனாக இருப்பவனே! நீதான் எனக்கு ஆதாரமாக இருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று கூறி எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருப்பவனே அவன்தான் என்று காட்டுகிறார்.

**"ஆதாரமிலேன் அருளைப் பெறவே**
**நீதான் ஒரு சற்றும்நினைந் திலையே**
**வேதாகம ஞான வினோத மனோ**
**தீதா சுரலோக சிகாமணியே!"**

ஜடாயு இராவணனைப் பார்த்து, "உலகத்திற்கே தாயாகிய சீதையை நீ என்ன நினைத்தாய்? பேதையே? உனக்கு இனி யார் ஆதாரம்? தாயையே பகைத்துக் கொண்டால் வேறு யார் ஆதாரம்?" என்று கேட்டார். கடைசி வரையில் தாயார்தான் ஒட்டியிருப்பாள். எல்லாவற்றிற்கும் ஆதாரமாக உள்ள ஆண்டவனை நினைக்காமல் இருந்தால் வேறு யார் ஆதாரம். நீ இரக்கப்பட்டு எனக்கு அருள் செய்ய வேண்டும். என்னே விதியின் பயன்! "மின்னே நிகர்வாழ்வு இது". மின்னல் ஒருவெட்டு வெட்டி மறைந்துவிடும். நம்வாழ்க்கை அப்படியே! காலமாகிய பிரபஞ்ச எல்லைக்குள் வாழ்க்கை என்பது ஒரு மின்னல் மாதிரி, நான் இதையே பார்த்து அலைவதா? "பொன்னே, மணியே, அருளே, பொருளே!" முருகப்பெருமான் பொன், முருகப் பெருமானே மணி, முருகப்பெருமானே அருள் என்று கூறினார். அவரை விரைவிலே வந்து ஆட்கொண்டு விட்டார் மயிலேறி வந்த முருகன். நாமோ பொன், பொருள், மணி இவற்றையே பார்க்கிறோம். அவனே எல்லாம் என்று பார்த்தால் உய்தி உண்டு.

**"மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்**
**என்னே விதியின் பயனிங் இதுவோ**
**பொன்னே மணியே பொருளே அருளே**
**மன்னே மயிலே றியவா கனனே!"** 27

- தொடரும்

# ஆழ்வார்கள் ஆய்வு மையம் எடுத்த மார்கழிப் பெருவிழா - மங்கலத் தமிழ்விழா

சென்னை, தியாகராயநகர், சர்.பி.டி. தியாகராயர் அரங்கில் ஆழ்வார்கள் ஆய்வு மையத்தின் சார்பில் 19.12.2007 புதன்கிழமை மாலை மார்கழிப் பெருவிழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

"மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்" என்று கண்ணன் கூறியுள்ளார். மார்கழியைப் பீடுடைய மாதம் என நம் முன்னோர் கூறியுள்ளனர். உலகியல் இன்பங்களுக்கு அல்லாத இறைவழிபாடுகளுக்கு மட்டுமே என அமைந்த மார்கழித் திங்களைத் தேவர்களின் புலர்காலை என்பர். ஆண்டாளின் திருப்பாவையும், மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் மார்கழித் திங்களில் பாடிப்பரவ அருளிச் செய்யப்பெற்றன. இது குறித்தே ஆழ்வார்கள் ஆய்வு மையம் மார்கழி மங்கலத் திருவிழாவிற்குப் பெரிய ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

விழாவில் பேராசிரியர் திரு. மா. வைத்தியலிங்கம், திரு. மா. கோடிலிங்கம் இருவரும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பனுவல்களை உள்ளமுருகப்பாடி மகிழ்வித்தனர். செந்தமிழ்வாரிதி முனைவர். இரா. செல்வக்கணபதி அவர்கள் டாக்டர். எஸ். ஜெகத்ரட்சகன் சார்பில் அனைவரையும் வரவேற்றார்.

ஆய்வுமையத் தலைவரும், மேனாள் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமாகிய அருளாளர், திரு. இராம. வீரப்பன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. வெ. இராமசுப்பிரமணியன் அவர்கள் தம் சிறப்புரையில் நரகம் என்பது தனக்கென வாழ்வது, சொர்க்கம் என்பது பிறர்க்கென வாழ்வது என்பதை வானுலகில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டி அழகுற விளக்கினார்.



விழாவில் திரு. சோ. சத்தியசீலன் அவர்கள் தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது. நேற்றும், இன்றும், நாளையும் மனித குலத்திற்கு வழிகாட்டவல்லது இராமாயணமா? மகாபாரதமா? பகவத்கீதையா? என்ற தலைப்பில் தமிழறிஞர்கள் திரு. இரா. செல்வக்கணபதி, திரு. கோ. சாரங்கபாணி, திரு. தா. கு. சுப்பிரமணியன். திரு. த. இராமலிங்கம், திரு. ம. இராமலிங்கம், திரு. கங்கை மணிமாறன் முதலியோர் பங்கேற்று வாதிட்டனர். நடுவர் பகவத் கீதையே என தீர்ப்புரைத்தார்.

பேராசிரியர். முனைவர் திரு. கு. ஞானசம்பந்தம் சூடிக்கொடுத்த சுடர்கொடி என்ற தலைப்பிலும், திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஆழ்வார்களும், அமுத தமிழும் என்ற தலைப்பிலும் ஆய்வுரைகள் நிகழ்த்தினார். கடும் மழையிலும் நூற்றுக்கணக்கான அன்பர்கள் திரண்டு வந்து விழாவில் பங்கேற்றனர்.

விழாவை ஆழ்வார்கள் ஆய்வு மைய நிறுவனரும், செயலருமாகிய டாக்டர். திரு. எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

# சூடிக் கொடுத்த சுடர் கொடி

தமிழகத்திலே முத்துக்கு பெருமை பெற்றதான பாண்டிய தேசத்திலே இரண்டு வைணவ முத்துக்கள் அவதரித்து வைணவத்திற்கு ஏற்றம் அளித்தன.

கலி பிறந்து தொண்ணூற்றேழு வருடங்களுக்குப் பிறகு தொண்ணூற்றெட்டாவதான நள வருடத்தில், ஆடி மாதம், சுக்ல பக்ஷம், சதுர்த்தி, செவ்வாய்க்கிழமை கூடிய பூர நட்சத்திரத்தில் பூமிப்பிராட்டியாரின் அம்ச அவதாரமாய் வில்லிபுத்தூரில் பெரியாழ்வார் என்னும் முன் குடுமி ஸ்ரீ வைஷ்ணவரின் துளசித் தோட்டத்தில் ஒரு திருத்துழாய் செடியின் கீழே கோதை என்னும் ஆண்டாள் அவதரித்தாள்.

பிள்ளைப்பேரற்ற பெரியாழ்வாரும் மிகுந்த பூரிப்புடன் பரம தரித்ரன் பெருநிதி (புதையல்) எடுத்தது போல அக்குழந்தையை எடுத்து தனது தர்மபத்தினியின் கைகளிலே கொடுத்து சீராட்டி, பாராட்டி, பாலூட்டி வளர்த்தார். வைஷ்ணவர்களின் கடமையான பஞ்ச ஸம்ஸ்காரங்களை செய்தும் எம்பெருமானின் கல்யாண குண அனுபவங்களை சொல்லியும் வயதினோடேயே ஞானத்தையும் ஊட்டி வளர்த்தார்.

விஷ்ணு சித்தரான பெரியாழ்வார் வடபெருங்கோயிலுடையானுக்காக தினந்தோறும் பலவிதமான சுகந்தத்தை தரும் புஷ்பங்களையெல்லாம் பறித்து மாலையாக்கி எம்பெருமானுக்கு சூட்டி அழகு பாப்பது வழக்கம். ஆனால் கோதையோ அம்மலர் மாலையை அவருக்குத் தெரியாமல் எடுத்து தன் அழகான ஆபரணங்கள், பட்டாடைகள், கல்லிழைத்த வளையல்கள் அனைத்தையும் அணிந்து அதன் ஊடேவும் மலர்மாலையையும் தானே அணிந்து "அந்த எம்பெருமானுக்கு நானும் பொருந்துவேனோ?" என அழகு பார்ப்பது வழக்கம் இவர் அழகு பார்க்கும் கிணறு கண்ணாடி கிணறு என்று இப்பொழுதும் அழைக்கப்படுகிறது.



இவ்வாறு ஆனந்தம் அடைந்த ஆண்டாளின் செய்கையை ஒருநாள் கண்டார் விஷ்ணுசித்தர். 'என்ன பாவம் செய்தேன்!' என எண்ணி அன்றைய மாலைகளை எம்பெருமானுக்கு சூட்டாமலும், வேதனையில் ஆழ்ந்தும் உறங்கிப் போனார். எம்பெருமானிடம் 'தன் மகள் செய்த தவறை மன்னிக்க வேண்டும்' என்று மன்றாடினார். ஆனால் அப்பெருமானோ விஷ்ணுசித்தரின் கனவிலே தோன்றி "உம் மகள் சூடிக்களைந்த மாலையே எனக்குப் பேரானந்தம் அளிக்கவல்லது. அதனால் அதையே யாம் விரும்பினோம்" எனக்கூற அன்று முதல் கோதை சூடிய மாலையையே எம்பெருமானுக்கு சமர்ப்பித்தார். அன்று முதல் **சூடிக்கொடுத்த சூடர் கொடி**யானாள் ஆண்டாள்.

ஆண்டாள் எம்பெருமானின் மேல் உள்ள ஈடுபாட்டால் 'நாச்சியார் திருமொழி' என்னும் பதிகத்தைப் பாடிப் பரவசமடைந்தாள். பெண்களுக்கே உள்ள திருமணத்துக்கேற்ற

பருவமும் வந்தது. பெரியாழ்வார் ஆண்டாளை நோக்கி, "நீ யாருக்கு வாழ்க்கைப்பட விரும்புகிறாய்?" எனக் கேட்க அவரும் "மானிடவர்கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன்" என்று சொல்ல பட்டர்பிரானும் தகப்பனுக்கே உள்ள கவலையோடு - அப்படியானால் -எனக் கேட்க, 'பெருமாளையே மணம்புரிய விரும்புகிறேன்' என்றாள்.

பெரியாழ்வாரும் வியந்து 108 எம்பெருமானின் குணங்களையும் ஒவ்வொன்றாய் சொல்ல, ஆண்டாளும் அதுகேட்டு ஆனந்தக் கண்ணீர் துளிக்க, மயிர்க்கூச்செரியும் மேனியோடே திருவரங்கனின் குழலழகு, வாயழகு, கண்ணழகுகளை கேட்டு பெருங்காதல் கொண்டு அவனையே மணாளனாக வரித்தாள்.

மார்கழி மாதத்திலே நோன்பிருந்து திருப்பாவை பாசுரங்களை பாடி மகிழ்ந்து எம்பெருமானை அடைய பெருமுயற்சி செய்தாள்.

விஷ்ணுசித்தரோ இது எப்படி நடக்கும் என எண்ண, எம்பெருமானே அவர் கனவில் தோன்றி "உம் மகளை திருஅரங்கத்திற்கு அழைத்து வாரும்" என கூற அதே நாளில் அரங்கத்து பட்டருக்கும் சொப்பணம் சாதிக்க. அவரும் அரங்கனின் பரிவாரங்களோடே வில்லிபுத்தூர் சென்று ஆண்டாளை சகலவித மரியாதைகளுடன் அழைத்து வந்து அரங்கனின் முன் நிற்க, ஆண்டாளும் பாதாதி கேசம் எம்பெருமானை கண்ணாலே பருகி திருவடியின் பக்கம் சென்று அரங்கனின் திருவடிகளை அடைந்தாள்.

"ஒரு மகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன். செங்கண்மால்தான் கொண்டு போனான்" என்னும்படி விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வார் அரங்கனுக்கு பெண் கொடுத்து மாமனார் என்ற பெருமையையும் பெற்றார்.

ஆழ்வார்களின் காலத்திலே பெரியாழ்வாரும், ஆண்டாளும் ஒரே திவ்ய தேசத்திலே (ஸ்ரீ வில்லிபுத்தூரில்) அவதரித்தனர். அடுத்ததான ஆச்சார்யர்கள் காலத்திலே நாலாயிர திவ்ய பிரபந்தங்களைத் தொகுத்து அளித்தவரான ஸ்ரீமந் நாதமுனிகளும், அவரது பேரனான ஆளவந்தாரும் காட்டுமன்னார்கோயிலிலே அவதரித்தனர். இவ்விரண்டு திவ்ய தேசத்திற்கு மட்டுமே இரண்டிரண்டு இரத்தினங்களை அளித்த பெருமை உண்டு.

ஆண்டாளும் தான் அவதரித்த துளசி மாடத்திற்கு மாதந்தோறும் பூர நட்சத்திரத்தன்றும், எம்பெருமானோடு சேர்ந்து ஆடி பூரத்தன்றும் எழுந்தருளி திருமஞ்சனம், அருளிச் செயல்களை கண்டுகக்கிறார். ஸ்ரீமந் நாதமுனிகளும் அவரது அவதார தினமான ஆனி அனுஷத்திற்கு முதல் நாள் அவரது திருமாளிகைக்கு எழுந்தருளி சங்குப்பால் அம்சையித்து எம்பெருமானை மங்களாசாஸனம் செய்து அருளிச்செயல் கண்டருளுகிறார். இந்நன்னாளில் ஆழ்வார், ஆச்சார்யர்களை சேவித்து எம்பெருமானின் பரமகிருபையைப் பெறுவோமாக!

ஆழ்வார்களின் வரிசையிலே ஆண்டாளுக்கும், திருப்பாணாழ்வாருக்கும் ஒரு தனி பெருமை உண்டு. இவ்விருவருமே இப்புவியில் அவதரித்து இறுதியில் திருவரங்கத்தில் உள்ள திருவரங்கனின் திருவடிகளில் இணைந்த பெருமை கொண்டவர்களாவர்.


மார்கழி (தனுர்) மாதத்தின் முப்பது நாளும் பரந்தாமனை காதல் கொண்டு பாடிய ஆண்டாளின் திருப்பாவையில் முதல்பத்து பாசுரங்களில் நாராயணனின் நாமங்களை சொல்லியும், இரண்டாவது பத்து பாசுரங்களில் நாராயணனின் திருவடியை சரணாகதி செய்தும் ஆண்டாளின் வழியில் நாமும் சென்று அவர் அடைந்த ஆனந்தத்தை நாமும் அடைவோமாக.

பொலிக! பொலிக!! பொலிக!!!

– **எஸ்.என். தோத்தாத்திரி,** காட்டுமன்னார்கோயில்


**திருக்கோயில்**

**திங்கள் இதழ்**



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4.உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5.உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

# சைவமும் தமிழும்

கலைமாமணி செந்தமிழ்வாரிதி
முனைவர் இரா. செல்வக்கணபதி



- சென்ற இதழ் தொடர்ச்சி...

உமை பற்றிய புராண வரலாறுகளும், பிற தெய்வங்களுடைய உறவு முறைகளும், அவள் பகை அழித்த திறமும், உமையின் கருணைத் திறமும் பல பாடல்களில் விளக்கப்பெற்றுள்ளன. படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் செய்யும் இறையவர்களுக்கும் மேலானவளாக, அன்னோர் நெஞ்சில் உமை ஒளிமிக்க தீபமாக நின்று ஒளி செய்கிறாள் என்று இளங்கோவடிகள் சிவசக்தியின் சிறப்பு உரைக்கிறார்.

**"அரி அரன் பூமேலான் அகமலர்மேல் மன்னும்**
**விரிகதிர் அம்சோதி விளக்காகியே நிற்பாய்"**

என்பது எயினர்கள் பாடிய தோத்திரங்களுள் ஒன்றாக அமைந்துள்ளது. உமையை, திருமாலின் தங்கை என்று கூறுவது சமய மரபு. சிலம்பு இச்செய்தியை உரைக்கும்போது உமையைத், திருவ மாற்கு இளையாள் என்று உறவுமுறை காட்டுகிறது. சிவன், திருமால் என்ற இரு கடவுளர்களோடும், உமையைத் தொடர்புபடுத்திச் சமய சமரசம் காட்டுகிறார் இளங்கோவடிகள்

**"சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்**
**செங்கண் அரிமால் சினவிடைமேல் நின்றாயால்**
**கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து**
**மங்கை உருவாய் மறை ஏத்தவே நிற்பாய்"**

திருமால் கையில் நிற்கும் சங்கு சக்கரங்கள், உமையின் கைகளிலும் இடம்பெற்றிருப்பதாகக் கூறுவது அரிய செய்தியாக உள்ளது.

**உமை - பகையழித்த திறம்**

சிலம்பில் இடம் பெற்றுள்ள வழக்குரை காதையில் உமை பகை அழிக்க எடுத்த பல வடிவங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சினத்துடன் ஒற்றைச் சிலம்பைக் கையில் ஏந்தி, தலைவிரிகோலமாய் அரண்மனை வாசலில் வந்து நின்ற கண்ணகியைக் கண்டு நடுக்கம் உற்ற வாயிற்காவலன், உரைப்பதாக அமைந்துள்ள ஒரு பகுதியில், உமையின் வீரச் செயல்கள் பட்டியல் இடப்பட்டுள்ளன.

**"அடர்த்து எழு குருதி அடங்காப் பசுந்துணிப்**
**பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி**
**வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்**
**அறுவர்க்கு இளைய நங்கை: இறைவனை**
**ஆடல் கண்டு அருளிய அணங்கு: சூருடைக்**
**கானகம் உகந்த காளி: தாருகன்**
**பேருரம் கிழித்த பெண்...."**

என்று தொடரும் வழக்குரை காதைப் பகுதியில், உமை பற்றிய பழைய வீர வரலாறுகள் இனங்காட்டப்பட்டுள்ளன. இப்பகுதியில் உமை, மகிடாசுரமர்த்தினி, பிடாரி, பத்திரகாளி, துர்க்கை என எடுத்த வீரம் செறிந்த கோலங்கள் இனங்காட்டப்பட்டுள்ளன. 1800 ஆண்டுகளுக்கு முன்னரே உமை தொடர்பான, புராணச் செய்திகள் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

**சிலம்பில் முருகன்**

சிலப்பதிகாரத்தின் மூன்றாவது பகுதி, வஞ்சிக் காண்டம் என்று பெயர் பெறும். இக்காண்டத்தின் முதல் காதை, குன்றக்குரவை என்று குறிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில், குறிஞ்சி நில மக்களாகிய குன்றக்குறவர் மேற்கொண்ட தெய்வ வழிபாட்டு முறைமைகளும், முருகனை அவர்கள் புகழ்ந்து பாடிய இசைப்பாடல்களும் நிறைவாக இடம்பெற்றுள்ளன. முருகன் மாமர வடிவில் நின்ற சூரனைத் தடிந்த செய்தி, உரவு நீர் மா கொன்ற வேல் ஏந்தி என்ற தொடரால் குறிக்கப்பட்டுள்ளது. அவள் கை வேல்.

**"பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டு ஒருநாள்**
**சூர் மா தடிந்த சுடர் இலைய வெள்வேல்"**

என்று குறிக்கப்பட்டுள்ளது. குருகு பெயர்குன்றம் என்று குறிக்கப்படும். கிரவுஞ்ச மலையை முருகன் அழித்த திறம்

**"வருதகிரி கோலவுணன் மார்பம் பிளந்து**
**குருகு பெயர்க்குன்றம் கொன்ற நெடுவேல்"**

என்பதால் விளக்கப் பெற்றுள்ளது.

**புராண வரலாறுகள்**

பாட்டுமடை என்ற பகுதியில், முருகன் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள் செய்யும் தலங்கள் பற்றிய குறிப்பும், அவன், ஆறுமுகங்களும், பன்னிரு கைகளும் கொண்டவன் என்ற செய்தியும், அவன் கார்த்திகைப் பெண்டிரிடம் பாலுண்டவன் என்ற புராண வரலாறும் காணப்படுகின்றன.

**"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்**
**ஏரகமும் நீங்கா இறைவன்"**

என்றும்,

**"அணிமுகங்கள் ஓராறும் ஈராறு கையும்**
**இணையின்றித் தானுடையான்"**

என்றும்

**"சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்**
**திருமுலைப்பால் உண்டான்"**

என்றும் வரும் பகுதிகள், முருகன் அருள் வரலாற்றின் அரிய பதிவுகளாக அமைந்துள்ளன.

**பிற காப்பியங்களில் சிவன்**

சிலப்பதிகாரத்துடன் தொடர்புடையது மணிமேகலை. இந்நூல், சீத்தலைச் சாத்தனார் என்பவரால் இயற்றப்பட்டது. பௌத்தம் சார்ந்து வாழ்ந்த, மாதவிமகள் மணிமேகலை என்பாளின் வரலாறு கூறுவது. சிலப்பதிகாரத்தைப் போல் சமயம் சார்ந்த செய்திகள் இலைமறை காயாக இந்நூலுள் கூறப்பட்டிருக்கவில்லை. நேரடியாகவே இந்நூல், பௌத்த மதச் சிறப்புரைக்கும் போக்கில் அமைந்துள்ளது. அக்காலத்தே பூம்புகாரில் வாழ்ந்திருந்த, பல்வேறு சமயவாதிகளையும், அவர்தம் சமயக் கொள்கைகளையும், அவர்கள் தம்முள் நிகழ்த்திக் கொண்ட சமயம் சார்ந்த வாக்கு வாதங்களையும் இந்நூல் எடுத்துரைக்கிறது. மணிமேகலை தோன்றிய காலப் பகுதியிலேயே, வழிபாட்டுச் சமயமாக இருந்த சைவம், தத்துவச்சமயமாக உருப்பெற்று விட்டமையை இந்நூல் வழி அறிய முடிகிறது. சீவக சிந்தாமணியில் வேதவழிப்பட்ட சமயங்கள் குறித்த, சில குறிப்புகள் மட்டுமே காணப்படுகின்றன. வளையாபதி, குண்டலகேசி என்பவை முழுமையாக நமக்குக் கிடைக்கவில்லை. எனவே, சைவம் பற்றிய ஆய்வுக்கு இக்காப்பியங்கள் இடம் தரவில்லை.

**கல்லாடம்**

சைவத் தமிழ் இலக்கிய வரிசையில் குறிப்பிடத்தக்க பழமையான நூல் கல்லாடம். 'கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே' என்பது. இந்நூலைக் கற்றாரின் ஆற்றலை விளக்கும் ஒரு பழமொழி. கல்லாடர் என்பார் இந்நூலை இயற்றினார். இந்நூல் கடைச்சங்க காலத்திற்கும், தேவார ஆசிரியர்கள் காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியைச் சார்ந்தது. பிற்காலத்தில், சைவசமயம் சார்ந்த, கோவை நூல்கள் தோன்றுவதற்குக் கல்லாடம் வழி வகுத்தது. நூறு அகப்பொருள் துறைகளை விளக்கும் போக்கில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல், மதுரையில் எழுந்தருளியிருக்கும் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களையும், நகரச் சிறப்புக்களையும் விரித்துரைக்கிறது. திருமுருகாற்றுப் படையை முதல் முருக இலக்கியமாகக் கொள்வது போல். சிவன் சிறப்புரைக்கும் முதல் இலக்கியமாக இதனைக் கருதலாம். இந்நூல் அரங்கேற்றம் நிகழும்போது, சிவன், இந்நூலைக் கேட்டுத் தம் முடியை அசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார் என்று ஒரு வெண்பா எடுத்துரைக்கிறது.

**கல்லாடத்தில் விநாயகர்**

சங்க இலக்கியங்களில் காணப்படாத விநாயகர் துதி முதன்முதல் இந்நூலுள் காணப்படுகிறது. திங்கள் முடிபொறுத்த என்று தொடங்கி இப்பாடல் 40 வரிகளுடன் நிறைகிறது. விநாயகன் திருமேனி அமைப்பும், அவன் சிவன் மகன் என்பதுவும், அவன் ஆற்றல்களும், அருளிப்பாடுகளும், மாங்கனி பெற வேண்டிப் பெற்றோரை வலம் வந்த வரலாறும் பிறவும் இப்பாடலில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இதுபோல முருகனுக்கும் ஒரு வாழ்த்துப் பாடல் இந்நூலுள் இடம் பெற்றுள்ளது. பாய்திரை உடுத்த ஞாலம் என்று தொடங்கும் இப்பாடல் 65 வரிகளைக் கொண்டது. முருகன் அழகும், ஆற்றலும், அருளிப்பாடும் இதனுள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

**கல்லாடத்தில் சிவன் வரலாறுகள்**

சிவன் பெருமை பேசும் இந்நூலுள், சிவன் தொடர்பான பல புராணச் செய்திகள் பதிவு செய்யப்பெற்றுள்ளன. தருமிக்கு மதுரை இறைவன் பொற்கிழி அளித்த வரலாறு,

**"கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்**
**பொற்குவை தருமிக்கு அற்புடன் உதவி**
**என் உளம் குடிகொண்டு, இருபயன்**
**அளிக்கும்**
**கள் அவிழ குழல்சேர் கருணை**
**எம்பெருமான்"**

எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிவனே, மதுரையில் சவுந்தரபாண்டியன் என்ற பெயரில், முடிபுனைந்துஆட்சி செய்தான் என்பதை,

**"பெருநீர் வையை வளைநீர்க் கூடல்**
**உடல்உயிர் என்ன உறைதரு நாயகன்**
**கடுக்கை மலர் மாற்றி வேப்பு அலர் சூடி**
**ஐவாய்க் காப்புவிட்டு அணிபூண் அணிந்து**
**விரிசடை மறைத்து மணிமுடி கவித்து**
**விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி எடுத்து**
**வழுதி யாகி முழுது உலகு அளிக்கும்**
**பேரருள் நாயகன்"**

என்ற வரிகளால், கல்லாடர் பதிவு செய்கிறார். சைவத்தமிழ் இலக்கிய வரலாற்றில், இந்நூல், காலப்பழமையும் சாலப் பெருமையும் கொண்டு விளங்குகின்றது.

**அரிய கொடைகள்**

சைவமும் தமிழும் என்ற இத்தலைப்பில், தொல்காப்பியம் தொடங்கிக் கல்லாடம் வரையிலான நூல்களில் காணப்படும் சைவம் பற்றிய அரிய குறிப்புகள் திரட்டி வழங்கப்பட்டுள்ளன. பிற்காலத்தே, சைவத் திருமுறைகளும், சிற்றிலக்கியங்களும் தோற்றம் கொள்வதற்கு உரிய ஊற்றத்தை, இவை வழங்கியுள்ளமை கண்டு காட்டப்பட்டது. சைவமும் தமிழும் என்ற பகுப்பில் சிவன், உமை, முருகன், விநாயகர் முதலிய கடவுளர்கள் தொடர்பாக எழுந்த தனிப்பாடல்களும், நூல்களும், ஒன்றாகவே ஆராயப்பட்டுள்ளன. முருக வழிபாடு முதன்மை பெற்றிருந்தமை நன்கு புலனாயிற்று. சக்தி வழிபாடும் சிறந்திருந்தது. விநாயகர் வழிபாடு மிகப் பிற்காலத்தில்தான் தமிழகத்திற்கு அறிமுகமாயிற்று. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சைவம் வழங்கியிருக்கும் அரிய கொடைகளை, இப்பகுதி உறுதி செய்து நிற்கிறது.

## திருவிடந்தை

# அருள்மிகு நித்தியகல்யாண பெருமாள்



பெருமாள் எழுந்தருளி அருள்பாலிக்கின்ற, பன்னிரு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட 108 திவ்ய தேசங்களில், தொண்டை நாட்டு திருப்பதிகள் 22ல் சிறப்பு பெற்றது திருவிடந்தை திருத்தலம்.

### திருக்கோயில் அமைவிடம்

சென்னைக்கு தெற்கே, எழில்மிகு கிழக்கு கடற்கரை சாலையில் 42 கி.மீ. தூரத்திலும், கோவளத்திலிருந்து 3 கி.மீ. தூரத்திலும், மாமல்லபுரத்திலிருந்து வடக்கே 16 கி.மீ. தூரத்திலும், வங்காளவிரிகுடா கடலை நோக்கியவாறு 118 மீட்டர் நீளமும், 43 மீட்டர் அகலமும் கொண்ட 5074 மீட்டர் பரப்பளவில் கிழக்கு நோக்கி இத்திருக்கோயில் அமைந்து உள்ளது.

### திருவிடந்தை - பெயர்க்காரணம்

எந்தை என்றால் எம் தந்தை என பொருள். எம் தந்தையாகிய பெருமாள், திரு(லட்சுமி)வை தம் இடப்பாகத்தில் கொண்டுள்ளதால் திருவிடவெந்தை என பெயர் ஏற்பட்டது. பின் மருவி திருவிடந்தை ஆயிற்று.

பெருமாளுக்கு நித்யமும் (தினமும்) கல்யாணம் நடந்ததால் 'நித்தியகல்யாண புரி' என்றும், பெரிய பிராட்டியார் அவதாரம் செய்த தலமாதலால் 'ஸ்ரீபுரி' என்றும், ஆதிவராக மூர்த்தியாக நின்று சேவை சாதிப்பதால் 'வராக புரி' என்றும், கல்வெட்டுகளில் காணப்படும் பெயர் 'அசுரகுல கால நல்லூர், வாமகவீபுரி' என்றும் அழைக்கப்படுகிறது.

### புராண வரலாறு

முன்னொரு காலத்தில் வாழ்ந்த மேகநாதன் என்ற அசுரனுக்கு பலி என்ற மகன் பிறந்து நீதிமானாய் அரசாட்சி செய்து வந்தபோது, மாலி, மால்யவான், சுமாலி என்ற மூன்று அசுரர்கள் தங்களுடன் இணைந்து வந்து தேவர்களுடன் போரிட அழைத்ததாகவும், பலி மறுத்து விட்டதாகவும், மூவரும் சென்று தேவர்களுடன் போரிட்டு, தோல்வியுற்று வந்து பலியிடம் சரணாகதி அடைந்ததாகவும், அவர்களுக்காக தேவர்களுடன் போராடி பலி ஜெயித்ததாகவும், தேவர்களுடன் யுத்தம் நடத்திய பாவம் நீங்க இத்தலத்தில் உள்ள வராக தீர்த்த கரையில் பலி கடும் தவம் புரிந்ததாகவும், அவனது தவத்தை மெச்சிய பெருமாள் வராக மூர்த்தியாக காட்சி அளித்தாகவும் புராணம் கூறுகிறது. எனவே இத்தலத்திற்கு வராகபுரி என்ற பெயரும் வழங்கலாயிற்று.

சம்பு தீவில் சரஸ்வதி ஆற்றங்கரையில் குனி என்னும் முனிவர் தவமியற்றி வந்தார். அவருக்கு பணிவிடை செய்வதற்கு கன்னிகை ஒருத்தி அங்கு வந்து சேர்ந்தாள். நாளடைவில் அம்முனிவர் வீடுபேறெய்தினார். கன்னிகை அம்முனிவரை பின்பற்றி கடும் தவமியற்றி வந்தாள். ஒருநாள் நாரத முனிவர் அவர்முன் தோன்றி திருமணம் செய்து கொள்ளாமல் வீடுபேறு பெற இயலாது என கூறினார். திருமணம் செய்து கொள்ள பல முனிவர்கள்

தவமியற்றி வந்த இடத்தை அடைந்தாள். அம்முனிவர்களில் யாரேனும் ஒருவர் தன்னை மணம் புரிந்து கொள்ள வேண்டினாள். அவளது துயர நிலையைக் கண்டு காலவ முனிவர் அவளை மணந்து கொண்டார். பெரிய பிராட்டியார் லட்சுமியின் அருளால் ஓராண்டில் அவர்களுக்கு 360 கன்னிகைகள் தோன்றினர். முதல் கன்னிகையின் பெயர் கோமளவல்லி, குழந்தைகளை ஈன்றபின் அவளும் மறைந்தாள். காலவ முனிவர் அக்கன்னிகைகளை காப்பாற்ற இயலாதவராக சம்பு தீவிற்கு வந்த முனிவர்களிடம் விசனப்படவே, அவர்கள் அவரை திருவிடந்தை சென்று பெருமாளை வழிபட கூறினர். தம் கன்னிகைகளுக்கு நல்ல வரன்கள் அமையவேண்டுமென அவரும் தம்பெண்களுடன் வந்து பெருமாளை வேண்டினார். பெருமாளும் அவர் வேண்டுகோளை ஏற்று, பிரம்மச்சாரியாக வந்து நாள் தோறும் ஒரு கன்னிகையை திருமணம் செய்து கொண்டு, 360ம் நாள் அனைவரையும் ஒருவராக்கி அகிலவல்லி என்ற திருநாமம் சூட்டி தன் இடப்பக்கத்தில் எழுந்தருள செய்து சரம சுலோகத்தை உலகத்தாருக்கு உபதேசித்து அருளினார். தினமும் திருமணம் செய்து கொண்டதால் பெருமாளுக்கு 'நித்யகல்யாண பெருமாள்' எனவும், இத்தலத்திற்கு 'நித்யகல்யாணபுரி' எனவும் பெயர் வழங்கலாயிற்று.

### மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புகள்

### மூர்த்தி

பெருமாளின் தசாவதாரங்களில் மூன்றாவது அவதாரமாகிய வராக அவதாரத்தில் ஆதிவராகப் பெருமாளாய், அகிலவல்லி தாயாருடன் ஆறரை அடி உயரத்தில் அழகுற எழுந்தருளி அருள் பாலிக்கிறார்.

### தலம்

வராகபுரி என்றும், நித்யகல்யாணபுரி என்றும், ஸ்ரீபுரி என்றும் பாராட்டப்படுகின்ற இத்திருவிடந்தை 108 திவ்ய தேசங்களில் 62வது திவ்யதேசமாகும்.



### தீர்த்தம்

கல்யாண தீர்த்தம், வராக தீர்த்தம், ரங்கநாதர் தீர்த்தம் ஆகிய தீர்த்தங்களை கொண்டது.

கல்யாண தீர்த்தத்தில் சித்திரை மாதத்தில் நீராடி பெருமாளை சேவித்தால் பாவங்கள் அழியும் என்பதும், வராக தீர்த்தத்தில் மாசி மாதத்தில் நீராடி பெருமாளை சேவித்தால் மோட்சம் கிடைக்கும் என்பதும், ரங்கநாதர் தீர்த்தத்தில் மார்கழி மாதத்தில் நீராடி பெருமாளை சேவித்தால் நினைத்தது நடக்கும் என்பதும் பெருமாளின் அருள்வாக்கு.

### மங்களா சாசனம்

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கை ஆழ்வார் காலம் 8ம் நூற்றாண்டாகும். இவர் இத்திருக்கோயிலில் உள்ள பெருமாளை போற்றி 10 பாசுரங்களை பாடி மங்களாசாசனம் செய்துள்ளார். (பெரிய திருமொழி பாசுரங்கள் (1108 முதல் 1117 வரை) திருமலைக்கு சென்று ஏழுமலையானை தரிசிக்கும்போதும் **"ஏத்துவார் தம் மனத்துளான் இடவெந்தை மேவிய எம்பிரான், தீர்த்த நீர்தடம் சோலைசூழ் திருவேங்கடம் அடைநெஞ்சமே"** என்று திருவிடந்தை பெருமாளை பாடி பரவியுள்ளார். அழகிய மணவாளதாசர் நூற்றெட்டு திருப்பதி அந்தாதியில் 92வது பாசுரத்தில் 'தொண்டானேன் திருவிடவெந்தைக்கே செறிந்து' எனவும். குரவை ராமானுஜதாசர் தனது நூற்றெட்டு திருப்பதி திருப்புகழில் 92வது பாசுரத்தில் 'இடவெந்தை பதிவாழ்மேவிய பெருமாளே' எனவும் பாடி பரவியுள்ளனர்.

பெருமாளின் திருநாமங்களும் சிறப்புகளும்

மூலவர் - ஆதிவராகப் பெருமாள் சுதாதிருமேனி ஆறரை அடி உயரம்.

மூலவர் தாயார் - அகிலவல்லி தாயார் (பூமிதேவி அம்சம்)

கோலம் - நின்ற கோலம், கிழக்கே திருமுக மண்டலம், ஒரு திருவடி பூமியிலும், மறு திருவடி ஆதிசேஷன் தம்பதியினர் சிரசிலும், உபதேச திருக்கோலம்

தனிக்கோயில் தாயார் - கோமளவல்லி தாயார் (ஸ்ரீதேவி அம்சம்)

விமானம் - கல்யாண விமானம்

தீர்த்தம் - கல்யாண தீர்த்தம்

தலவிருட்சம் - புன்னை மரம்

தலபுஷ்பம் - கஸ்தூரி

ஆகமம் பிரத்தியட்சம் - வைகானசம் பலி என்ற அசுரமன்னன், மார்க்கண்டேயர், காலவரிஷி

விசேச தளிகை - மனோகரம்

மங்களாசாசனம் - திருமங்கை ஆழ்வார்

### தோஷங்கள் நிவர்த்தி தலம்

உற்சவர் நித்தியகல்யாண பெருமாள், கோமளவல்லி தாயார் இருவருக்கும் தாடையில் இயற்கையிலேயே அமைந்த திருஷ்டி பொட்டு, சேவிப்போரது திருஷ்டி தோஷத்தை நீக்குகிறது. ஆதிசேஷன் தம்பதியை சேவிப்பவர்களுக்கு ராகு கேது தோஷங்கள் நீங்குகின்றன. பள்ளி கொண்ட பெருமாளாய் ஸ்ரீதேவி, பூதேவியுடன் சேவை சாதிக்கின்ற ரங்கநாதரை தரிசிப்போருக்கு சுக்ரதோஷம் நிவர்த்தியாகிறது. நித்யமும், திருமணம்செய்து கொண்ட மூலவர் ஆதிவராகப் பெருமாளை சேவிப்பவர்களுக்கு திருமணம் நடைபெறுவதில் உள்ள தோஷங்கள் அனைத்தும் நிவர்த்தியாகின்றன.

### திருக்கோயில் வழிபாட்டுமுறை

குளித்து சுத்தமான ஆச்சாரத்துடன், தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, துளசி ஆகியவற்றுடன் கோயிலுக்கு வரவேண்டும், சன்னதியில் அர்ச்சனை செய்துவிட்டு பிரகாரத்தை 4 முறை சுற்றிவிட்டு கொடிமரத்திற்கு அருகில் வடக்கு நோக்கி தலைவைத்து கீழே விழுந்து வணங்க வேண்டும். கொடிமரத்திற்கு அருகே நின்று தமது வேண்டுதல்களை இறைவனிடம் சொல்ல வேண்டும். மூலஸ்தானத்தை சேவித்துவிட்டு இதர சன்னதிகளை பிறகு சேவிக்க வேண்டும். கோயிலின் உள்ளே இறைசிந்தனை மட்டுமே மேலோங்கிட வேண்டும்.

### திருமண பிரார்த்தனை வழிபாட்டுமுறை

திருமணமாகாத ஆணோ, பெண்ணோ, கல்யாண தீர்த்தத்தில் குளித்துவிட்டு ஆச்சாரத்துடன் தேங்காய், பழம், இரு கஸ்தூரி மாலைகள் வெற்றிலைபாக்குடன் கோயிலுக்குள் சென்று பெருமாள் முன்பு தன் பெயரில் அர்ச்சனை செய்து விட்டு, அர்ச்சகர் கொடுக்கும் ஒருமாலையை கழுத்தில் அணிந்து கொண்டு ஒன்பது முறை கோயிலை பிரதட்சணம் வரவேண்டும். பின்கொடிமரம் அருகில் வடக்கு நோக்கி விழுந்து சேவித்துவிட்டு, மாலையை வீட்டுக்கு எடுத்துச் சென்று பத்திரமாக வைக்க வேண்டும். திருமணம் முடிந்தபிறகு தம்பதியினர் பழைய மாலையுடன் வந்து, அர்ச்சனை செய்துவிட்டு செல்லவேண்டும். ராகு கேது தோஷங்கள், திருஷ்டி தோஷம் ஆகியவை நிவர்த்தி ஆகவும் மேற்கண்டவாறு வழிபாடுகளை செய்திட வேண்டும்.

### பூஜை காலங்கள்

நித்தியபடி நான்கு கால பூஜைகள் வைகானச ஆகமப்படி விமரிசையாக நடைபெறுகிறது.


காலை சந்தி பூஜை காலை 7.00 மணி முதல் 7.30 மணி வரை

உச்சிகால பூஜை பகல் 11.30 மணி முதல் 12.00 மணி வரை

சாயரட்சை பூஜை மாலை 5.30 மணிமுதல் 6.00 மணி வரை

அர்த்தஜாம பூஜை இரவு 7.30 மணி முதல் 8.00 மணி வரை

காலை 6.00 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரையிலும், சேவார்த்திகளின் தரிசனத்திற்காக சந்நிதிகள் திறந்திருக்கும். உற்சவ காலங்களில் பூஜை காலங்கள் மாறுதலுக்கு உட்பட்டது.



### கல்வெட்டுகள்

தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் 1910-ம்

ஆண்டில் படியெடுக்கப் பட்டுள்ள (வ.எண். 258 முதல் 283) கல்வெட்டுகளில் இருந்து கீழ்காணும் அரிய செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது.



1. ராஜராஜ சோழனின் 17-வது ஆட்சியாண்டு கல்வெட்டு (கி.பி. 1001) அவர் பிறந்த ஆவணி சதயத்தை ஈறாகக் கொண்டு ஏழுநாள் திருவிழா நடத்த கட்டளையிட்ட செய்தியை கூறுகிறது.

2. ராஜராஜ சோழனின் 19-வது ஆட்சியாண்டு கல்வெட்டு (கி.பி. 1003) கும்ப ஞாயிறு முழுமையும் பிராமண போஜனத்துக்கு மூலதனம் அளித்த செய்தியை கூறுகிறது.

3. முதல் ராஜ ராஜ சோழனின் 19-வது ஆண்டு கல்வெட்டு (கி.பி. 1003) பங்குனி உத்திரம் ஆதியாக ஒன்பது நாள் திருவிழா நடத்த மூலதனம் வழங்கிய செய்தியை கூறுகிறது.

4. விஜய ராஜேந்திர சோழரின் 35-வது ஆட்சி ஆண்டில் (.பி. 1052) திருவிடவெந்தை ஆதிவராக பெருமாளுக்கு இந்த கிராமமே தேவதானமாக வழங்கப்பட்டுள்ளது.

5. இதே சோழனின் 29-வது ஆட்சியாண்டு கல்வெட்டு (கி.பி.1013) பங்குனி உத்திர திருநாளில் பிராமண போஜனத்துக்கு வழங்கிய நன்கொடையை கூறுகிறது.

6. திருமங்கையாழ்வார் பெயரில் கலிச்சிங்கன்மடம் ஒன்று இருந்ததையும், அமாவாசைதோறும் அங்கு பிராமண போஜனம் நடந்ததையும், குலோத்துங்க சோழனின் 45-வது ஆட்சியாண்டு கல்வெட்டு (கி.பி. 1115) கூறுகிறது.

## திருவிழாக்களும் பூஜைகளும்

நித்தியப்படி நான்கு கால பூஜைகள் வைகானஸ ஆகமப்படி சிறப்புடன் நடைபெறுகிறது. ஆனி கருடசேவை, ஆடிப்பூரம், கஜேந்திரமோட்சம் கருடசேவை, ஸ்ரீஜெயந்தி, உறியடி உற்சவம், நவராத்திரி, விஜயதசமி, தீபாவளி, கார்த்திகை தீபம், தனுர்மாத பூஜை, மாசி மகம், கருடசேவை, பங்குனி உத்திரம், சித்திரை பிரம்மோற்சவம், வைகாசி வசந்த உற்சவம் ஆகியவை சிறப்புடன் நடத்தப்பட்டு வருகிறது. வருடம் முழுவதும் உபயதாரர்கள் மூலம் திருக்கல்யாண உற்சவம் மற்றும் திருமஞ்சனம் நித்திய கல்யாண பெருமாளுக்கு நடத்தப்படுகிறது. காலை 6 மணி முதல் மதியம் 12 மணி வரையிலும் பிற்பகல் 3 மணி முதல் 8 மணி வரையிலும் சன்னதிகள் தரிசனத்திற்கு திறந்திருக்கும்.

## பஸ் போக்குவரத்து

சென்னையிலிருந்து பேருந்து தடம் எண்கள் 118, 188ஏ, 188கே ஆகிய பேருந்துகளும், கோவளத்தில் இருந்து காண்டீபன், 117 எண் உள்ள பேருந்துகளும், வேன்களும் இத்திருக்கோயில் வழியே செல்கிறது.

## ரயில் போக்குவரத்து

தென் மாவட்டங்களில் இருந்து செங்கல்பட்டு வரை ரயிலில் வந்து அங்கிருந்து பேருந்து மூலம் மாமல்லபுரம் வந்து, பிறகு திருவிடந்தை வரலாம். அல்லது சென்னை சென்று அங்கிருந்து அடையார் வழியாக வரலாம்.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : த. பிச்சாண்டி, இ.ஆ.ப. சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்
இந்து சமய அறநிலையத் துறை, சென்னை - 600 034.
தொலைபேசி எண் : 28334811 / 12 / 13
ஆசிரியர் (கூ.பொ) : ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர் : சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை - 86.
தொலைபேசி : 23450920 / 28117575

# அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில்

பெசன்ட் நகர், சென்னை - 90.




திருமகளுக்கென தனிப்பட்ட முறையில்
அமைக்கப்பட்ட திருக்கோயில்
அஷ்டாங்க விமானத்தில் அமைந்தது.
மூலவர் திருமணக்கோலத்தில் காட்சியளிக்கும் தலம்

ஆதிலட்சுமி, தானிய லட்சுமி, தைரிய லட்சுமி, சந்தான லட்சுமி, விஜய லட்சுமி, வித்யா லட்சுமி, கஜ லட்சுமி, தனலட்சுமி என்னும் எட்டு வகை உருவங்களும் அஷ்டாங்க விமானத்தில் காட்சிதரும் திருக்கோயில்.
இத்திருக்கோயிலின் திருப்பணிகள் வெகுவிரைவில் துவங்கப்படவுள்ளன. உத்தேசமாக கீழ்க்கண்டவாறு மதிப்பிடப்பட்டுள்ளது.

| வ.எண். | திருப்பணி விவரம் | உத்தேச மதிப்பு ரூ. |
|---|---|---|
| 1. | அஷ்டாங்க விமானம் 3 தளம் சேர்த்து வெளிப்புறம் சீரமைத்தல் மற்றும் மராமத்து | 10,35,800 |
| 2. | காயத்ரி மண்டபம் - திருப்பணி மற்றும் மராமத்துப்பணி | 3,04,186 |
| 3. | சங்கநிதி விமானம் பழுதுபார்த்தல் | 1,15,000 |
| 4. | பத்மநிதி விமானம் பழுதுபார்த்தல் | 1,28,000 |
| 5. | தசாவதார விமானம் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் | 75,000 |
| 6. | குருவாயூரப்பன் விமானம் பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் | 2,85,100 |
| 7. | சக்கரத்தாழ்வார் விமானம் பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் | 1,50,00 |
| 8. | ஆஞ்சநேய விமானம் பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் | 2,00,000 |
| 9. | தன்வந்திரி விமானம் பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் | 45,000 |
| 10. | கருடாழ்வார் சன்னதி விமானம் பழுதுபார்த்தல் | 40,000 |

உபயத்திருப்பணி செய்பவர்களின் பெயர்கள் கல்வெட்டுகளில் பொறிக்கப்படும். உரியதொகை கொடுத்து அச்சு ரசீது பெற்றுக் கொள்ளவும்.

**நிதிநிறைந்தோர் பொற்குவை தாரீர்! நிதிகுறைந்தோர் காசுகள் தாரீர்!**



**இரா. இரகுநாதன்** எம்.ஏ.,
செயல் அலுவலர்

**அ. இளம்பரிதி** எம்.ஏ., பி.எல்.,
தக்கார் . உதவி ஆணையர்

பதிவு எண் : TN/PMG/(CCR)/707/06-08/WPP No.451/06-08

# தமிழ்நாடு பவர் ஃபைனான்ஸ்

முதலீட்டிற்கு முழுபாதுகாப்பு அளிக்கும் தமிழ்நாடு அரசு நிறுவனம்

| வட்டி விகிதம் | மூத்த குடிமக்களுக்கு (58 வயது) |
|---|---|

## முறையான வட்டி வழங்கும் திட்டம் (RIPS)

| | |
|---|---|
| **10.47%** | **11.02%** |
| 36, 48 & 60 மாதங்களுக்கு (ஆண்டிற்கு) | 36, 48 & 60 மாதங்களுக்கு (ஆண்டிற்கு) |

## திரள் வட்டி வழங்கும் திட்டம் (CIPS)

| | |
|---|---|
| **12.91%** | **13.73%** |
| 60 மாதங்களுக்கு<br>(மாதாந்திர கூட்டு வட்டி விகிதம் 10% ஒரு வருடத்திற்கு) | 60 மாதங்களுக்கு<br>(மாதாந்திர கூட்டு வட்டி விகிதம் 10% ஒரு வருடத்திற்கு) |

⌘ இந்திய அரசின் நிறுவன அலுவல் அமைச்சகத்தினால் பொது நிதி நிறுவனம் என அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

⌘ அறக்கட்டளைகள் / வருங்கால வைப்பு நிதி / பணிக்கொடை அறக்கட்டளைகள் முதலீடு செய்ய தகுதி வாய்ந்த நிறுவனம்

# தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

டுபிட்கோ-பவர்ஃபின் டவர், எண். 490/3-4, அண்ணா சாலை, நந்தனம்,
சென்னை - 600 035. போன் : 2432 9945, 2432 9946 பேக்ஸ் : 2432 9914
ஈ-மெயில் : powerfin@md3.vsnl.net.in Visit us at : www.tninfrafinance.com / www.tnpowerfinance,.com

DIPR/ /DIS/2007

This is in continuation of our earlier advertisement published in Financial Express on 19-09-2007 Visit us at : www.in.gov.in / www.southindia.com